ANNUAL REPORT
වාර්ෂික වාර්තාව
ஆண்டு அறிக்கை
2022

PRACTICAL SKILLS
LEAD TO
REAL SUCCESS



තෘතීයික හා වෘත්තීය අධ්‍යාපන කොමිෂන් සභාව
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

ஆணைக்குழுத் தகவல்

நிறுவனம்	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
அமைச்சு	கல்வி அமைச்சு
முகவரி	03ஆம் மாடி, "நிபுணதா பியச", 354/2 எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு - 05
மின்னஞ்சல்	info@tvec.gov.lk
இணையம்	www.tvec.gov.lk
தொலைபேசி	011-7608000
தொலைநகல்	011-2555007
கணக்காய்வாளர்	கணக்காய்வாளர் தலைமை அதிபதி, கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்
வங்கியாளர்	மக்கள் வங்கி, Y.M.B.A கிளை, பொறள்ளை

வருடாந்த அறிக்கை/ஆண்டறிக்கை

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையில் ஆர்வமுள்ள தரப்பினருக்கு இத் தகவல்களைக் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். ஜனவரி 01, 2022 முதல் டிசம்பர் 31, 2022 வரையிலான காலப்பகுதிக்கான மேற்கண்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை, 2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் செயல்திறனைப் பற்றிய தெளிவான புரிதலைப் பெறுவதற்கான தகவல்களை மூலோபாய நிதி மற்றும் நிதி அல்லாத செயல்திறன் எனும் வகையில் இந்த அறிக்கை வழங்குகிறது.

அறிக்கை கட்டமைப்பு

ஆண்டறிக்கையைத் தயாரிக்கும் போது பின்வரும் பல்வேறு விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

நிலைப்புத்தன்மையானதென அறிக்கையிடல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 1990 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டம் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டம்

- 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்- பிரிவு 14
- ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிதிநிலை அறிக்கைகள்

- இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கியல் தரங்கள்
- இலங்கையில் அரசாங்க பொது கணக்கியல் அமைப்புகள்
- நல்லாட்சிக்கான பொது முயற்சி வழிகாட்டுதல்கள்: அத்தியாயம் 06
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம்

பொருளடக்கம் பக்க எண்

ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் 1

எமது ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

தொலைநோக்கு

செயற்பணி

விழுமியங்கள்

TVEC தரக் கொள்கை

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆளுநர் சபை 3

ஆளுநர் சபையின் பொறுப்பு

ஆணைக்குழுவின் அமைப்பு

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

பதவிவழி மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

ஆணைக்குழு கூட்டம்

சபை உறுப்பினர்களின் விபரங்கள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை 1991-2022 11

தலைவரின் செய்தி 13

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 15

இடர் மதிப்பீடு மற்றும் தடுப்பு உத்திகள் 17

SWOT பகுப்பாய்வு

உத்திகள்

நிதி மற்றும் தொழிற்படு செயல்திறன் 18

நிதிநிலை செயற்திறன் 19

திறைசேரியின் மதிப்பிடப்பட்ட செலவுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள்

2022 இல் சேவைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

நிதிப்பகுப்பாய்வு 2012 - 2022 (ரூ. மில்லியன்)

தொழிற்படு செயற்திறன் 21

திட்டங்களை வகுத்தல்

தொழில்துறை மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சி ஆய்வுகளை செயல்படுத்துதல்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வித் துறைக்கான தேசிய அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு மற்றும் செயலாக்கம்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள்

புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள் - 2022

இற்றைப்படுத்தப்பட்ட தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2022

தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் மொழிபெயர்ப்பு அலுவல்கள்

புதிய தேர்ச்சித் தரங்கள் வெளியீடு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை குழு

பயிற்சி நிறுவனங்களுக்கான தர உத்தரவாத நடைமுறைகள் கடைபிடிப்பு

தொழிற் பயிற்சி நிறுவன பதிவு

பாடநெறி தராதர அங்கீகாரம்

தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு

தர மேம்பாட்டு முறைமையை நிறுவுதல் (QIS)

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) விருதளித்தல்

அறிவுசார் கணிப்பீடு (எழுத்துமூல கணிப்பீடு)

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 04 ஐ விருதளிப்பதற்காக பொது எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 05 மற்றும் 06 இற்கா எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

செய்முறை கணிப்பீடு

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரி

தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை ஒழுங்குபடுத்துதல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை மேற்பார்வை செய்தல்

மாற்றுத்திறனாளிகளுக்கான NVQ கணிப்பீடுகளில் நியாயமான விட்டுக்கொடுப்பு

நியாயமான விட்டுக்கொடுப்பு பற்றி கணிப்பீட்டாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் (சுற்றறிக்கை 01/ 2020 படி)

ஹதேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) சான்றிதழ் வழங்குதல்

2006 தொடக்கம் 2022 வரை வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களின் புள்ளிவிபரயல்

தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5/6 இற்கு சமனாக்கம்/ மேப்பிங் செய்தல்

தொழில் முதிர்ச்சி பெற்ற தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்

தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்

பின்வரும் சான்றிதழ்களுக்கான சான்றிதழ் வைத்திருப்பவர்களின் கோரிக்கைகளின்படி சமமான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டச் சான்றிதழ்களை வழங்குதல்

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) சான்றிதழ் வழங்குதல்

முந்தைய. கற்றல். அங்கீகார. (RPL). முறையினூடான. கணிப்பீட்டின். முன்னேற்றம்

தேர்ச்சிசார் கணிப்பீட்டின் மாறாமையை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்துதல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டின் மாறாத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் கணிப்பீட்டாளர்களின் இற்றைப்படுத்த அறிவை மேம்படுத்த செயலமர்வுகளை நடாத்துதல்.

தகவல் முறைமை 44

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கம்

பதிவு மற்றும் தராதர அங்கீகார இணைய பக்கம்

புதிய அம்சங்களைச் சேர்ப்பதன் மூலம் (NVQ) தகவல் முறைமை மென்பொருளை மேம்படுத்துதல்

இணையம், மின்னஞ்சல் மற்றும் இதர வசதிகள்

ஆணைக்குழுவின் நூலகம்

பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்

கைத்தொழிற்துறை உறவுகள் 49

அறிமுகம்

துறைசார் திறன்கள் சபைகளை நடாத்திச் செல்லல்

கட்டுமான துறைசார் திறன்கள் சபை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை

சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை

விவசாயத் துறைசார் திறன்கள் சபை

சுகாதாரம் மற்றும் கவனிப்பு துறைசார் திறன்கள் சபை

துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்ற மீளாய்வு

விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

மாவட்ட ரீதியாக தொழிற் பயிற்சி நிலைய அலுவலர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வுகள்

RPL முறை தொடர்பான விழிப்புணர்வு செயலர்வுகளை நடாத்துதல்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் வளர்ச்சிக்கான ஆதரவை வழங்கும் செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்களுடன் அலுவல்கள் மேற்கொள்ளல்

வெளியீடுகள் 59

தொழிற்சந்தை தகவல் பருவ வெளியீடு

தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி (TVET Guide)

TVEC செய்திமடல்

NVQ தொழிற்படு கையேடு

TVET ஆராய்ச்சி கற்கைகள்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை (VET Plan) தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

ஆணைக்குழுவின் மனித வளம் 61

ஆணைக்குழு பதவியணி - 2022

2022 ஆம் ஆண்டில் நியமனம்

2022 ஆம் ஆண்டில் சேவையை விட்டு விலகியவர்கள் / ஓய்வு பெற்றவர்கள்

2022 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பதிற் கடமையாற்றுதல்/ கடமையை ஆவரணப்படுத்தல்

உள்ளூர் பயிற்சி

வருடாந்த தொழில்சார் அங்கத்துவக் கட்டணம் மீளளிப்பு

உள்ளக கணக்காய்வு மற்றும் விசாரணை 65

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 65

2022 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கட்டமைப்பு

சட்ட அலுவல்கள் 67

சட்டத்தை திருத்தம் செய்வதில் முன்னேற்றம்

நிறைவு செய்யப்பட்ட வழக்கு அலுவல்கள்

NVQ சுற்றறிக்கைகள் 68

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்று 69

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலைக் கூற்று 70

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு தேறுமதியில் மாற்றங்கள் 71

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று 72

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய குறிப்புகள் 74

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தொகுக்கப்பட்ட வருமானக் கூற்றிற்குரிய உப குறிப்புகள் 74

2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றிற்கான அட்டவணை 87

நிதிசார் சிறப்பம்சங்கள் 2022

தணிக்கை அறிக்கை 92

அமைவான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை 100

ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தின் கீழ் தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையின் ஒழுங்குபடுத்தல்கள் அமைப்பாக 1991 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன், 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தினூடாக வுஏநுவு துறைக்கான ஆராய்ச்சி நடாத்துதல், தொழிற் தகவல் முறைமையை மேம்படுத்துதல், நிதியுதவிளித்தல் மற்றும் TVET துறையில் சோதனை மற்றும் தரச் சான்றிதழுக்காக முகாமைத்துவ முறைமையை நிறுவுதல் போன்ற மேலதிக அதிகாரங்களுடன் இவ்வாணைக்குழு மீளத்தாபிக்கப்பட்டது. நாட்டின் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்சார் கல்வியின் கொள்கை உருவாக்கம், திட்டமிடல், தர உத்தரவாதம் மற்றும் ஒருங்கிணைப்பு மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் மூலம் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியின் உயர் தரத்தை பராமரிப்பதே ஆணைக்குழுவின் முதன்மைப் பொறுப்புகள் ஆகும்.

எமது ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு:

- பொருளாதாரத்தின் மனிதவளத் தேவைகளுக்கு இசைவாக சகல மட்டங்களிலும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை கொள்கை வகுத்தல், திட்டமிடல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- சான்றிதழ் அடங்கலாக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி விருதுகளை வழங்குவதற்காவும் மற்றும் ஏனைய கல்விசார் தகைமைகளை அளிப்பதற்காவும் தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முறைமையை அபிவிருத்தி செய்தல் மற்றும்.
- மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவகங்கள், முகவர்கள் மற்றும் ஏனைய சகல தாபனங்களினதும் கல்வி மற்றும் பயிற்சி தராதரங்களைப் பேணல்.

தொலைநோக்கு

நாட்டின் மனித வள மேம்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உயர் தரமான மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சியை அனைத்து குடிமக்களும் அணுகக்கூடிய ஓர் இலங்கை.

செயற்பணி

TVET துறைக்கான ஒழுங்குமுறை அமைப்பாக, சமூக-பொருளாதார நோக்கங்கள் மற்றும் மாறிவரும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி முறையை நிறுவி நடைமுறைப்படுத்துதல்.

விழுமியங்கள்

உயர் ஒருமைப்பாடு, உயர் தரத்திற்கான அர்ப்பணிப்பு, புதுமை, குழு உணர்வு, புதிய தொழில்நுட்பத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நிலைத்தன்மை மற்றும் பங்குதாரர்களுடன் பணியின் மூலம் சமமான உபசரிப்புக்கு இவ்வாணைக்குழு உறுதிபூண்டுள்ளது.

TVEC தரக் கொள்கை

NVQ தகுதிகள் மற்றும் எங்களுடன் பதிவுசெய்யப்பட்ட தொழில் பயிற்சி வழங்குநர்களுக்கு அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளில் பயிற்சி வழங்குநர்களுக்கு நாங்கள் வழங்கும் சேவைகளின் தரத்திற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

நாம் வழங்கும் சேவைகளின் தரத்தை உறுதிசெய்து பராமரித்துக்கொள்வதாக ISO 9001:2008 க்கு இணங்க தர முகாமைத்துவ முறைமையை நிறுவியுள்ளோம். தர முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்வதற்கும் மற்றும் எங்கள் சேவைகளின் செயல்திறனை மேம்படுத்தவும் நாங்கள் தொடர்ந்து முயற்சி செய்கிறோம்.

சுற்றியுள்ள சுற்றுச்சூழலை பாதுகாத்துக்கொண்டு இந்தக் கூட்டு நோக்கங்களை அடைவதற்கான மனித வள முகாமைத்துவ முறைமையை நாம் பராமரித்து வருகிறோம்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆளுநர் சபை

ஆளுநர் சபையின் பொறுப்பு

ஆணைக்குழுச் சட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்ய, விதிமுறைகள், ஒழுங்குமுறைகள் மற்றும் தொடர்புடைய மதிப்பீடு உட்பட மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் முழு செயல்முறையையும் மேற்பார்வையிடுவதற்கு ஆளுநர் சபை பொறுப்பாகும்.

ஆணைக்குழுவின் அமைப்பு

கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் இந்த ஆணைக்குழு, 1999 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தலைவர் உட்பட 11 உறுப்பினர்களையும், 6 பதவிவழி உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

- கலாநிதி.(எந்திரி.) உதேனி விக்கிரமசிங்க - தலைவர்
- பேராசிரியர் திரு. டி.எம். பந்துல பஹலவத்த - உறுப்பினர்
- திரு. எம்.ஜி.கே.எம்.பெர்னாண்டோ - உறுப்பினர்
- திரு. பி.ஏ.டி.ஆர்.சந்திரசிறி - உறுப்பினர்
- திரு. கனிஷ்க வீரசிங்க - உறுப்பினர்
- பேராசிரியர் திருவதி என்.ஆர். அபேநாயக்க - உறுப்பினர்
- திரு. ஜயந்த விஜேசிங்க - உறுப்பினர்
- திரு. மஞ்சுள ஹிரண்ய டி சில்வா - உறுப்பினர்
- பேராசிரியர் திரு. சுதந்த லியனகே - உறுப்பினர்
- பேராசிரியர் திரு. எச்.எச்.சுமதிபால - உறுப்பினர்
- திரு. சரத் சந்திர மொஹொட்டி - உறுப்பினர்

பதவிவழி மூலம் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

- கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம் - மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
- திரு. தரங்க நளீன் கம்லத் - உறுப்பினர்
  தலைவர் - தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
  (06.02.2020 முதல் 30.08.2022 வரை)
- திரு. ருச்சிக அமரசேகர - உறுப்பினர்
  தலைவர் - தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
  (30.09.2022 முதல்)
- திரு. எரந்த பஸ்நாயக்க - உறுப்பினர்
  தலைவர் - இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
  (07.07.2021 முதல் 17.11.2022 வரை)
- திரு. ஏ.டி. கெப்பிட்டிபொல - உறுப்பினர்
  தலைவர் - இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
  (17.11.2022 முதல)
- திரு. எஸ்.சி.ஜெகத் - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம் - தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்
- பேராசிரியர் கே.எல்.ஜயரத்ன - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம் - இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
  (06.02.2020 முதல் 30.08.2022 வரை)
- பேராசிரியர் திரு. சி.மஹேஷ் எதிரிசிங்க - உறுப்பினர்
  பணிப்பாளர் நாயகம் - இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
  (30.09.2022 முதல்)
- திருவதி. கீதா விமலவீர - உறுப்பினர்
  நிதியமைச்சு - திறைசேரி பிரதிநிதி
  (06.02.2020 முதல் 25.02.2022 வரை)
- திருவதி. ஹர்ஷனி சமரசிங்க -உறுப் பினர்
  நிதியமைச்சு - திறைசேரி பிரதிநிதி
  (25.03.2020 முதல் 30.08.2022 வரை)
- திருவதி. ஹர்ஷனி பெர்னாண்டோ -உறுப் பினர்
  நிதியமைச்சு - திறைசேரி பிரதிநிதி
  (30.09.2022 முதல)

ஆணைக்குழு கூட்டம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் உதவிப் பணிப்பாளர் (சட்ட அலுவல்கள்) ஆணைக்குழு சபையின் செயலாளராகவும் செயல்பட்டு 2022 இல் 13 சபைக் கூட்டங்களை நடத்தினார்..

சபை உறுப்பினர்களின் விபரங்கள்

கலாநிதி.(எந்திரி.) உதேனி விக்கிரமசிங்க



நிபுணத்துவம்

எந்திரவியல் பொறியியலாளர், விஞ்ஞானம் மற்றும் தொழிற்பயிற்சித் துறை

தகுதிகள்

கொத்தலாவ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் (M.Sc), மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக்கான முதுகலைப் பட்டம் (M.Ed) மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்பட்டம் (BSc (Eng)).

தற்போதைய பதவி

கமநல சேவைகள், வனசீவராசி பணியாற்றிய பின்பு 27 ஜனவரி 2021 முதல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவராக பணியாற்றுகிறார்.

கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர



நிபுணத்துவம்

பொருளாதாரம், தொழில்நுட்ப, தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் துறை

தகுதிகள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான கலாநிதிப் பட்டம், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான முதுகலைப்பட்டம் மற்றும் ரூஹுணு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்திற்கான இளங்கலைப் பட்டம் (Honors) பட்டய தொழில்முறை முகாமையாளர்கள் நிறுவகத்தின் சக உறுப்புரிமையைப் பெற்றிருத்தல்

தற்போதைய பதவி

27 ஏப்ரல் 2021 முதல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்

பேராசிரியர் திரு. டி.எம். பந்துல பஹலவத்த



நிபுணத்துவம்

செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம், சேவை முகாமைத்துவம் மற்றும் தர முகாமைத்துவம்

தகுதிகள்

1981 ஆம் ஆண்டில், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்றதுடன் 1987 இல் பெல்ஜியம் லுயென் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

1982 ஆம் ஆண்டு முதல், அவர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் வணிக பீடத்தில் வணிக நிர்வாகம், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தீர்மான அறிவியல் துறைகளில் பணிபுரிந்துள்ளதுடன் தற்போது தீர்மான அறிவியல் துறையில் மூத்த பேராசிரியராக பணியாற்றுகிறார்.

திரு. எம்.ஜி.கே.எம்.பெர்னாண்டோ



நிபுணத்துவம்

இலங்கை நிர்வாக சேவை

தகுதிகள்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கலைப் பட்டதாரியான இவர் 1984 ஆம் ஆண்டு முதல் இலங்கை நிர்வாக சேவையில் நிரந்தர அதிகாரியாக பல அமைச்சுக்களில் பணியாற்றியுள்ளார்.

தற்போதைய பதவி

2019-2020 ஆண்டுகளில் தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு உறுப்பினராகப் பணியாற்றி, தற்போது தேசியக் கல்வி ஆணைக்குழுவின் துணைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. பி.ஏ.டி.ஆர்.சந்திரசிறி



நிபுணத்துவம்

சிவில் பொறியியல் துறை

தகுதிகள்

மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா மற்றும் இங்கிலாந்தில் உள்ள சிட்டி அண்ட் கில்ட்ஸ் நிறுவனத்தில் சிவில் பொறியியல் பட்டதாரி. இலங்கை ஒருங்கிணைந்த பொறியியலாளர்கள் நிறுவகம் மற்றும் இலங்கை பட்டய நிபுணத்துவ முகாமையாளர்கள் நிறுவகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்

தற்போதைய பதவி

இலங்கையின் ஒருங்கிணைந்த பொறியியலாளர்கள் நிறுவகத்தின் அங்கீகார சபையின் உறுப்பினராக சேவையாற்றுகிறார். இலங்கை பொறியியலாளர்கள் சபையின் தற்போதைய உறுப்பினராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் நற்சான்றிதழ் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

திரு. கனிக வீரசிங்க



நிபுணத்துவம்

சட்டத்தரணி

தகுதிகள்

இளங்கலைப் பட்டம் உட்பட சர்வதேச உறவுகள்/விவகாரங்களில் முதுகலைப் பட்டப்படிப்புத் தகுதிகளைப் பெற்றுள்ளார். சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் (NUS) முகாமைத்துவம் தொடர்பான நிறைவேற்றுக் கல்விப் பட்டம் பெற்றுள்ளார். இவர் தற்போது சர்வதேச உறவுகளில் (சர்வதேச தொழிலாளர் தரநிலைகள்) முனைவர் பட்டம் பெறுவதற்கான கற்கைகளில் ஈடுபட்டுள்ளார்..

தற்போதைய பதவி

இலங்கை தொழில் தருநர்கள் (முதலாளிகள்) சம்மேளனத்தின் பணிப்பாளர் நாயகம்/தலைமை நிர்வாக அதிகாரி 2021 மார்ச் வரை கடமையாற்றிய இவர் மீண்டும் வழக்காடு அலுவல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

பேராசிரியர் திருவதி என்.ஆர். அபேநாயக்க



நிபுணத்துவம்

வியாபாரப் புள்ளிவிபரவியல் துறை

தகுதிகள்

2017 இல் பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர், 1995 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலை அறிவியல் (B.Sc. Hons) பட்டத்தையும் மற்றும் 2001 இல் முதுகலைப் பட்டத்தையும (MSc) பெற்றுள்ளார். 2008 இல் இந்தியாவின் புது தில்லியில் உள்ள இந்திய வேளாண் புள்ளிவிபரவியல் நிறுவகத்தில் முனைவர் பட்டத்தையும் (PhD) பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

தற்போது இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் விவசாய வணிக முகாமைத்துவப் பிரிவில் பிரயோக புள்ளிவிபரவியல் பேராசிரியராகப் பணிபுரியும் இவர் தனது ஏழு வருட ஒய்வினை விடுமுறைக்காக இங்கிலாந்தின் மான்செஸ்டர் பெருநகரப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராகப் பணியாற்றுகிறார். விவசாய வணிக முகாமைத்துவத் திணைக்களத்தின் பிரதானியாகவும் (ABM) இலங்கை பிரயோக புள்ளிவிபரவியல்ல் நிறுவகத்தின் (IASSL) தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜயந்த விஜேசிங்க



நிபுணத்துவம்

தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் உறவுகள்

தகுதிகள்

இவர் களனிப் பல்கலைக்கழகத்தில் தனது BA பட்டப்படிப்பின் முதல் பாகத்தை முடித்துள்ளதுடன் வெகுஜன தொடர்பு மற்றும் சமூக அபிவிருத்திக்கான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர் உறவுகள் பிரிவின் உதவிச் செயலாளராகவும், களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை கம்பெனியில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் அதே தேயிலைத் தொழிற்சாலையின் கணக்காய்வுக் குழு உறுப்பினராகவும் பணியாற்றுகிறார்.

திரு. மஞ்சுள ஹிரண்ய டி சில்வா



நிபுணத்துவம்

கணக்கியல் மற்றும் முகாமைத்துவம்

தகுதிகள்

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்பு பட்டமும், லண்டன் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளார். மேலும் இவர் பட்டய முகாமைத்துவக் கணக்காளராகவும் உள்ளார்.

தற்போதைய பதவி

இவர் 2023 ஜனவரி 31 வரை மூன்று வருட காலத்திற்கு இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பொதுச் செயலாளராகவும் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றுவார். தற்போது Central Finance நிறுவகம் மற்றும் CAE BPPL ஹோல்டிங் நிறுவகத்தின் பணிப்பாளராகவும் பணிபுரிகிறார். கொழும்பு பல்கலைக்கழகம், சனச பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியாவில் உள்ள எடித் கோவன் பல்கலைக்கழகம் உட்பட பல உயர்கல்வி நிறுவகங்களில் வெளிவாரி விரிவுரையாளராகவும் இவர் உள்ளார்.

பேராசிரியர் திரு. சுதந்த லியனகே



நிபுணத்துவம்

இரசாயண விஞ்ஞானம், இரசாயணக் கைத்தொழில்துறை, கல்வி, உயர் கல்வி, தேர்தல் முறை மற்றும் கொள்கைகள் போன்ற பல்துறை சார்ந்த அனுபவம் கொண்ட பேராசிரியர்.

தகுதிகள்

கலாநிதிப் பட்டம் - ஐக்கிய இராச்சியத்தின் வேல்ஸ்லிலுள்ள கார்டிப் பல்கலைக்கழகம்
கலாநிதிப் பட்டத்திற்கு பிந்தைய பட்டம் - அவுஸ்திரேலியாவிலுள்ள அடிலேய்ட் பல்கலைக்கழகம்,
ஜப்பான் இபராகி பல்கலைக்கழகம்
இரசாயணவியல் சிறப்புப் பட்டம் - ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

தற்போதைய பதவி

ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2022 வரை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 26 ஆவது துணைவேந்தராக நியமிக்கப்பட்டார். 1 ஆகஸ்ட் 2022 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாய பல்கலைக்கழகங்கள் சங்கத்தின் ஆளுநர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் திரு. எச்.எச்.சுமதிபால



நிபுணத்துவம்

திட நிலை பௌதீகம்

தகுதிகள்

2020 இல் பௌதீக விஞ்ஞான மூத்த பேராசிரியராக நியமிக்கப்பட்ட இவர் 1985 இல் களனிப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப்(மேல் பிரிவு) பட்டம் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

சர்வதேச அணுசக்தி முகவர் (IAEA) தொழில்நுட்ப ஒத்துழைப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் அணுசக்தி தொழில்நுட்ப கல்விக்கான ஆசிய வலையமைப்பின் (ANENT) திட்டமான சர்வதேச அணு அறிவியல் ஒலிம்பியாட் (INSO) இன் வழிநடத்தல் குழு உறுப்பினராகவும் சர்வதேச ஜூனியர் சயின்ஸ் ஒலிம்பியாட் (IJSO) இன் இலங்கை ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றுகிறார்.

திரு. சரத் சந்திர மொஹொட்டி



நிபுணத்துவம்

ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறை

தற்போதைய பதவி

கலதாரி ஹோட்டல், கோல் /பேஸ் ஹோட்டல் மற்றும் வாட்டர்ஸ் எட்ஜ் ஆகியவற்றில் பொது முகாமையாளராகவும் இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தில் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். தற்போது பொதுநலவாய ஹோட்டல்கள் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

திரு. ருச்சிக அமரசேகர



தற்போதைய பதவி

தலைவர் - தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

திரு. ஏ.டி. கெப்பிட்டிபொல



நிபுணத்துவம்

மின்னணு பொறியியலாளர்

தகுதிகள்

திரு. உபாலி கெப்பெட்டிபொல அவர்கள் ஜப்பான் - டோக்கியோ டென்ஷி கூகாகுயின் பல்கலைக்கழகத்தில் BSc பொறியியல் பட்டம் பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

தலைவர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

திரு. எஸ்.சி.ஜெகத்



நிபுணத்துவம்

முகாமைத்துவம் மற்றும் பொருளாதாரத் துறை

தகுதிகள்

ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் BSc முகாமைத்துவம் மற்றும் பொருளாதாரம் மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் ஆளுஉ (தென் கொரியா)

தற்போதைய பதவி

திரு. எஸ்.சி.ஜெகத் அவர்கள் தற்போது தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றுகிறார்

பேராசிரியர் திரு. சிமகேஷஎதிரிசிங்க



நிபுணத்துவம்

மின்னணு பொறியியலாளர்

தகுதிகள்

இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானத்தில் இளங்கலைப் பட்டத்தையும் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ள பேராசிரியர் எதிரிசிங்க அவர்கள் ஸ்வீடனின் உப்சாலா பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் 2007 இல் மின்னல் பாதுகாப்பில் பட்டம் பெற்றுள்ளார். மேலும் 2016 இல் லண்டன் மெட்ரோபொலிடன் பல்கலைக்கழகம் வணிக நிர்வாகத்தில் முதுகலை பட்டமும் பெற்றுள்ளார்.

தற்போதைய பதவி

பேராசிரியர் எதிரிசிங்க அவர்கள் கல்வி அமைச்சிலுள்ள இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் தற்போதைய பணிப்பாளர் நாயகம் ஆவார்.

திருவதி. ஹர்ஷனி பெர்னாண்டோ



நிபுணத்துவம்

கணக்கியல் மற்றும் நிர்வாகம்

தகுதிகள்

களனிப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பிரிவில் முதுகலைப் பட்டதாரியான இவர், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் இளங்கலை விஞ்ஞானப் பட்டதாரியும் ஆவார்.

தற்போதைய பதவி

இலங்கை கணக்கியல் சேவையில் முதல் தர அதிகாரியான இவர் தற்போது நிதி அமைச்சின் திறைசேரி செயல்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையாற்றுகிறார்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை 1991-2022

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வளர்ச்சிக்கும் மற்றும் அதன் தரத்தை உயர்த்துவதற்கும் இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதிலிருந்து தனித்துவமான பணிகளைச் செய்து வருகிறது. இந்த தனித்துவமான செயல்பாடுகளின்/ பணிகளின் சுருக்கமான குறிப்புகள் (வருட ரீதியாக) பின்வருமாறு:.

1992

பயிற்சி நிறுவனங்களுக்கான இடைக்கால பதிவு.

1995

பயிற்சி நிறுவனங்களை பதிவு செய்வதற்கான அபிவிருத்தித் திட்டம் (07 செப்டம்பர் 1995 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு)

1998

நிறுவன பதிவு ஆரம்பம் (“P” இலக்கம் நிறுவனங்களுக்கு வழங்குதல்)

தொழிலாளர் சந்தை தகவல் பருவவெளியீடு ஆரம்பம்

1999

1999 ஆம் ஆண்டு 50 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்விச் சட்டத்தினூடாக (திருத்தம்) கூடுதல் அதிகாரங்களுடன் சட்டபூர்வ அதிகாரசபையாக மீளத் தாப்பிப்பு

வளர்ந்து வரும் கைத்தொழிற் துறைகளுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை தயாரித்தல் ஆரம்பம்.

2000

தேசிய திறன்களின் அடிப்படையில் பயிற்சி திட்டங்களுக்கு பாடநெறி தராதர அங்கீகாரம்

2003

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையதளத்தின் அபிவிருத்தி மற்றும் ஆணைக்குழு அலுவல்களுக்கான உத்தியோகபூர்வ மின்னஞ்சல் வசதி அறிமுகம்.

2004

இலங்கையின் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறு தாபிப்பு.

2005

ஆணைக்குழுவில் ஆராய்ச்சிப் பிரிவு ஆரம்பம்.

2006

தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களால் நடாத்தப்படும் பயிற்சி பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரம் அளிப்பு மற்றும் NVQ தகுதிகள் விருதளிப்பு.

2007

மாகாண தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டம் தயாரிப்பு ஆரம்பம்

முதலாவது தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ் விருதளிப்பு விழா பெப்ரவரி 2007 இல் நடைபெற்றது.

2008

தொழில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆரம்பம்.

2009

தராதர அங்கீகாரம் பெற்ற தனியார் பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படும் தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழுக்கான அரச இலச்சினையைப் பயன்படுத்த அனுமதி

கணிப்பீட்டாளர்களின் தரவுத்தளத்தை பராமரித்தல் மற்றும் கணிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்தல் விரிவாக்கம்.

2011

ஆணைக்குழு இணைய தளத்தில் தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) பொதுச் சுற்றறிக்கைகளை வெளியிடுதல் ஆரம்பம்

தேசிய தொழிற்திறன் தகுதிக்குச் (NVQ) சமமான சான்றிதழ்களை விருதளித்தல் ஆரம்பம்.

2012

ஆணைக்குழுவின் பரீட்சை மற்றும் மதிப்பீட்டுப் பிரிவை தாபித்து தொழிற்படுவதற்கு அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி.

2013

ஆன்லைன் முறையினூடாக பயிற்சி நிலையப் பதிவுக்காக விண்ணப்பித்தல் ஆரம்பம்

2016

நிறுவன பதிவுச் சான்றிதழ் மின்னணு முறையினூடாக விநியோகித்தல் (e-certificate) அறிமுகம்

2020

மாற்றுத்திறனாளிக்கு நியாயமான தேர்ச்சிசார் கணிப்பீட்டை நடாத்துவதற்கான வசதி (சுற்றறிக்கை மற்றும் கருவிப்பொதி)

தேசிய தொழிற்திறன் தகுதிகளைப் (NVQ) பெறுவதற்தான நடவடிக்கைகளை துரித்தப்படுத்திக் கொள்ள தன்னியக்க முறைமை (Automated System) அறிமுகம்

திறன் கடவுச்சீட்டு அறிமுகம்.

2021

அனுபவத்தின் அடிப்படையில் தேசிய தொழிற்திறன் தகுதிகளை (NVQ) விரைவாகப் பெறுவதற்கான மின்னணு முறைமை (e-RPL Application Process) அறிமுகம்

மேம்படுத்தப்பட்ட குறியீட்டுடன் (QR Code) ஏஞ சான்றிதழை வழங்குதல் ஆரம்பம்.

தலைவரின் செய்தி



ஜனவரி 27, 2021 முதல் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தலைவராக எனது கடமைகளைத் தொடங்கினேன்..

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின் கீழ் 1991 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் ஒழுங்குமுறை அமைப்பாக தாபிக்கப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1999 ஆம் ஆண்டின் 50 இலக்க திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அபிவிருத்தி திட்டம் (Development Plan) தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. தயாரிப்புப் பணி தற்போது முடிவடைந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் இருந்து ஆராய்ச்சி முன்மொழிவுகள் மற்றும் குறுகியகால செயற்திட்டங்களுக்கான முன்மொழிவுகள் அழைக்கப்பட்டன. ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டாலும், முன்மொழிவுகள் மற்றும் எதிர்கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள குறைபாடுகள் 2022 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டதுடன் ஆராய்ச்சி கற்கைகளுடன் குறுகியகால செயற்திட்டங்களை மேற்கொள்ளவும் இடமளிக்கப்பட்டன.

தொழிற்பயிற்சி வழங்கும் பயிற்சி நிலையங்கள் இவ் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்ய வேண்டும். அதற்கமைய, நாடளாவிய ரீதியில் இயங்கும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களும் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின்படி, பதிவு செய்வதற்கான மதிப்பீட்டில் நிறுவனங்களின் உட்கட்டமைப்பு, பயிற்சி உபகரணங்கள் மற்றும் அவற்றின் போதுமான அளவு, பயிற்றுவிப்பாளர்களின் தகுதிகள், பயிற்சி அளிக்கும் முறை, பாடவிதானத்தின் போதுமைத்தன்மை போன்றவை மதிப்பிடப்பட்டு தேவையான பிரமாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பின் இரண்டு (02) வருட காலத்திற்கு நிறுவன பதிவு வழங்கப்படும்.

தொழிற்பயிற்சி துறையின் தேவைக்கேற்ப திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொழிற்பயிற்சி நிலையங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், நிர்ணயிக்கப்பட்ட தரங்களின்படி இயங்காத நிறுவனங்களின் பதிவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, நிறுவனங்களை வினைத்திறனாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கலாநிதி.(எந்திரி.) உதேனி விக்கிரமசிங்க
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி



ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கங்களில் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்தல், தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் தரத்தை பேணுதல் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி வழங்குவதற்கான நடைமுறைகளை நடாத்திச்செல்லல் ஆகியவை அடங்கும்.

நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 116 ஆக இருந்த போதிலும் தற்போதுள்ள அரசாங்கக் கொள்கைகளுக்கு இணங்க 2022 ஆம் ஆண்டின் இறுதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 84 பேராக மட்டுப்படுத்தப்பட்டது. மீளாய்வாண்டில் ஊழியர்களுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால படிப்புகளை கற்றுக்கொள்ளவும் வாய்ப்பு வழங்க இவ்வாணைக்குழுவுக்கு முடிந்தது.

2022 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினங்களுக்காக 7.540 மில்லியன் ‘ரூபாவையும் மீள்வரும் செலவினங்களுக்காக 152.725 மில்லியன் ‘ரூபாவையும் திறைசேரி விடுவித்தது. மேலும் ஆணைக்குழு ஈட்டிய மொத்த வருமானம் 63.8 மில்லியன் ‘ரூபாவாகும். வெளிநாட்டு உதவித் திட்டங்களை செயற்படுத்துகின்ற S4IG, Youlead, KOICA மற்றும் ILO போன்ற நிறுவனங்கள் ஆணைக்குழுவின் செயற்திறனை அதிகரித்துக் கொள்ள உதவி வருகின்றன.

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி மேம்பாட்டிற்கான தேசிய அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அமைச்சரவைப் பத்திரம் மூலம் ஜனாதிபதியின் ஒப்புதலைக் கோருமாறு அமைச்சுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் பணித்துள்ளார்.

மேலும், இதுவரையில் 21 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் (அதில் 18 திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன) TVET துறையின் பயிற்சித் தேவைகளைத் தீர்மானிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. TVET இன் உயர் தரத்தைப் பேணுவதற்காக அதன் பல முயற்சிகளின் ஒரு அங்கமாக தொழிற்கல்வி பற்றிய ஆராய்ச்சியையும் இவ் ஆணைக்குழு துரிதப்படுத்தியுள்ளது.

அனைத்து TVET நிறுவனங்களும் ஆணைக்குழுவின் கீழ் பதிவைப் பெற வேண்டும் என்பது சட்டப்பூர்வ தேவையாகும். அதற்கிணங்க, 2022 இல் 970 நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 132 பயிற்சி நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டதுடன் 443 பயிற்சி நிறுவனங்களின் பதிவும் புதுப்பிக்கப்பட்டன. மேலும், இலங்கையர்கள் வெளிநாட்டிக்கு வேலைக்குச் செல்லும்போதோ அல்லது படிக்கச் செல்லும்போதோ தங்களது சான்றிதழ்களின் பதிவை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 2,166 பதிவு உறுதிப்படுத்தல் கடிதங்களை வெளிவிவகார அமைச்சுக்கு இவ் ஆணைக்குழு மீளாய்வாண்டில் வழங்கியது.

மீளாய்வாண்டிலும் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறுவை திறம்பட செயல்படுத்துவதற்காக 32 புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன 33 தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் இற்றைப்படுத்தப்பட்டன. மேலும் 2022 இல் மிகுந்த சவால்களுக்கு மத்தியிலும் 1,390 பாடநெறிகளுக்கு NVQ இற்கான தராதர அங்கீகாரம் அளிக்கப்பட்டன. மேலும் அவ்வாண்டில் 299 பேர் தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களாக கணிப்பீட்டு பதிவுக்களரியில் சேர்க்கப்பட்டதுடன் சுமார் 117,954

தேசிய தொழிற்திறன் தகுதிச் (NVQ) சான்றிதழ்களும் விருதளிக்கப்பட்டன.

துறைசார் திறன்கள் சபைகளுடன் நல்லுறவைப் பேணுவதன் மூலம், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் உதவியுடன் செயல்படுத்த தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலும் தொடர்புடையவைகளை SSD மூலம் பூர்த்தி செய்யவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2022 இல் இரண்டு (02) தொழில் சந்தை தகவல் பருவவெளியீடுகள் வெளியிடப்பட்டதுடன் 468 NVQ சான்றிதழ் உரித்துடையாளர்களுக்கு திறன் கடவுச்சீட்டுகளும் (Skills Passport) வழங்கப்பட்டன.

மேற்கூறிய முக்கிய தர உறுதி முறைகளின் அடிப்படையில் உயர்தர செயல்திறனை அடைவதற்கான செயல்பாட்டில், எமது பணியாளர்கள் மற்றும் முறைமைகளுடன் தொடர்புடைய வெளித்தரப்பினரின் பங்களிப்பும் TVET இன் உயர் தர உத்தரவாதத்தை பராமரிக்க உதவியது என்பது எனது நம்பிக்கையாகும்.




கலாநிதி திரு. கே.ஏ.லலிததீர
பணிப்பாளர் நாயகம்

இடர் மதிப்பீடு மற்றும் தடுப்பு உத்திகள்

TVET இல் தர உத்தரவாதத்தைப் பேணுவதில் ஆணைக்குழு எதிர்கொள்ளும் அரசியல், பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் சட்டக் காரணிகளைக் கருத்தில் கொண்டு, ஆணைக்குழுவுக்கு ஏற்படும் இடர்களைக் கண்டறிந்து அந்த இடர்களைத் தடுக்கத் தேவையான உத்திகளைத் தீர்மானிக்க ஆணைக்குழு SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்துகிறது..

SWOT பகுப்பாய்வு



உத்திகள்

- சட்டத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேவையான திருத்தங்களைச் செய்தல்
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தகவல் முறைமைகளை தன்னியக்கமாக்கல் (Automation)
- பொது விளம்பரத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்
- உயர் தர உத்தரவாத முறைமையை ஏற்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்துதல்
- சர்வதேச உறவுகளை மேம்படுத்துதல்
- பணியாளர் பயிற்சி மற்றும் ஊக்கப்படுத்தல்

நிதி மற்றும் தொழிற்படு செயல்திறன்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுக்குழுவுக்கு பொதுத் திறைசேரியால் நிதியொதுக்கங்கள் வழங்கப்படுகிறது. இது தவிர, ஆணைக்குழு ஈட்டும் வருமானம் மற்றும் பிற உள்ளூர்/வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கும் மானியங்கள் மூலம் கிடைக்கும் நிதியுதவி செலவினங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. இந்த நிதி ஒதுக்கீடுகளின் உதவியுடன் நான்கு (04) தொழிற்படு பிரிவுகளும் மற்றும் அப்பிரிவுகளின் அலுவல்களுக்கு உதவியான மேலும் ஆறு (06) துணைப் பிரிவுகளின் பங்கேற்புடன் ஆணைக்குழுவின் குறிக்கோள்களை அடைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது.


திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு	தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல், தொழிற் சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்	
தேசிய தொழிற்திறன் தகுதிகள் பிரிவு	தேசிய தொழிற்திறன் வரையறுவை செயற்படுத்துவதற்காக தேசிய தேர்ச்சித் தரங்களை கட்டியெழுப்புதல் மற்றும் கைத்தொழிற் துறைத் தேவைகளை இனங்காணுதல். அதற்கமைய, தேசிய தேர்ச்சி தரங்கள் மற்றும் பாடவிதானங்களைத் தயாரித்து இற்றைப்படுத்தல் மற்றும் தேவைக்கமைய பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டங்களுக்கு மேப்பிங் செய்தல்	கைத்தொழிற்துறை உறவுகள் பிரிவு — தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் வளர்ச்சிக்காக தேவைப்படும் கைத்தொழிற் துறை தகவல்களை வழங்குதல், கைத்தொழிற்துறைகளுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புதல், தொழில் வழிகாட்டலை கட்டியெழுப்புதல் மற்றும் துறைசார் திறன் சபைகளின் ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்தல்
		தகவல் முறைமைகள் பிரிவு — ஒவ்வொரு பிரிவிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறைமைகளை நவீன தொழில்நுட்பத்துடன் தாபித்து இற்றைப்படுத்துதல் மற்றும் அவற்றிலுள்ள தரவுகளை களஞ்சியப்படுத்தி பகிருதல்
		நிர்வாகப் பிரிவு — அரச கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம் மனித வளத்தை நிர்வகித்தல், ஏனைய பிரிவுகளுக்குத் தேவைப்படும் வசதிகளைச் செய்துகொடுத்தல் மற்றும் நிறுவனத்துக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாக்கும் வகையில் அலுவல்களை மேற்கொள்ளல்
பதிவு, தரதர அங்கீகாரம் மற்றும் QMS பிரிவு	மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வியின் தர உத்தரவாத்தைப் பேணுவதற்காக பயிற்சி நிலையங்களைப் பதிவு செய்தல், பாடநெறிகளுக்கு தராதர அங்கீகாரமளித்தல் மற்றும் பயிற்சி நிறுவனங்களில் QMS ஐ நிறுவுதல்	நிதிப் பிரிவு — அனைத்து நிதிசார் பணிகளை மேற்கொள்வதற்காக தொழிற்படுதல் மற்றும் அவற்றை கணக்குகளில் காட்டி நிதிசார் அறிக்கைகளைத் தயாரித்து வெளியிடுதல்
		உள்ளக கணக்காய்வுப் பிரிவு — ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள், நிதிசார் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டுச் செயல்முறைகள் முறைப்படி நடக்கின்றதா என்பதை அவதானித்தல் மற்றும் அவற்றை மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் நிறுவன சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
கணிப்பீட்டுத் தர உத்தரவாதப் பிரிவு	கணிப்பீட்டுப் பிரமாணங்களை/ முறைகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துதல், தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்களைப் பயிற்றுவித்து பதிவு செய்தல் மற்றும் அவர்களை கணிப்பீட்டிற்கு பணிக்கமர்த்தல், அறிவுசார் கணிப்பீட்டை நடாத்துதல் மற்றும் ஒருங்கிணைப்புப் பணிகளைச் செய்தல் மற்றும் கணிப்பீட்டின் மாறாத்தன்மையைப் பேணி அதன் தரத்தை பராமரித்துக் கொண்டு செல்லல்.	நீதி/ சட்ட அலுவல்கள் பிரிவு — ஆணைக்குழு ஆளுநர் சபைக் கூட்டங்களை நடாத்துதல், ஆணைக்குழு தொழிற்பாடுகளின் போதும் மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களிலும் தேவைப்படும் சட்டரீதியான அலுவல்களை மேற்கொள்ளல்.

நிதிநிலை செயற்திறன்

2022 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் மீள்வருஞ் செலவினம் ரூ.173 மில்லியன் மற்றும் மூலதனச் செலவு ரூ.10 மில்லியன் ஆக மொத்தமாக ரூ.183 மில்லியன் செலவாக ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாண்டில் திறைசேரி மீள் செலவினங்களுக்காக 152.725 மில்லியன் ரூபாவையும், மூலதனச் செலவுக்காக 7.540 மில்லியன் ரூபாவையும் ஆணைக்குழுவிற்கு விடுவித்திருந்தது.

திறைசேரியின் மதிப்பிடப்பட்ட செலவுகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள்

விபரம்	மதிப்பிடப்பட்ட தொகை (ரூ. மில்லியன்)	திறைசேரி விடுவித்த தொகை (ரூ. மில்லியன்)
மீள்வரும் செலவு	173,000	152,725
மூலதன செலவு	10,000	7,540



2022 இல் சேவைகள் மூலம் ஈட்டப்பட்ட வருமானம்

	மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூ.மில்லியன்)	உண்மையான வருமானம் (ரூ. மில்லியன்)
நிறுவன பதிவுக் கட்டணம்	1.463	3.584
பாடநெறி தராத அங்கீகாரக் கட்டணம்	0.600	2.138
NVQ சான்றிதழ் அச்சடிப்புக் கட்டணம்	3.850	13.919
NVQ சமானப்படுத்தல் (மேப்பிங்) கட்டணம்	0.100	0.397
NVQ அல்லாத பாடநெறிகளின் பதிவு உறுதிப்படுத்தல் கட்டணம்	0.900	2.166
NVQ பரீட்சைக் கட்டணம்	29.400	35.942
திறன்கள் கடவுச்சீட்டுக் கட்டணம்	0.100	0.247
மாணவர் தேர்ச்சிப் பதிவுப் புத்தக விற்பனை	3.375	3.764

	மதிப்பிடப்பட்ட வருமானம் (ரூ.மில்லியன்)	உண்மையான வருமானம் (ரூ. மில்லியன்)
கணிப்பீட்டுக் மற்றும் கணிப்பீட்டாளர் சீருடை	2.600	1.447
ஏனைய புத்தக விற்பனை	0.012	0.030
QMS சான்றளிப்புக் கட்டணம்	0.750	0.100
திறன்கள் சபை நேர்முகத் தேர்வு	-	.037
மொத்த வருமானம்	**43.150**	**63.771**

நிதிப் பகுப்பாய்வு 2012 - 2022 (ரூ. மில்லியன்)

	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
பெறுகை	70.877	77.906	118.45	127.516	168.629	198.644	234.263	222.693	193.478	184.59	234.886
மூலதனச் செலவு	10.81	13.71	15.11	9.42	12.24	14.35	8.18	8.6	5.01	7.06	7.49
மீள்வருஞ் செலவு	54.76	59.62	77.89	91.52	120.8	124.31	142.72	163.09	138.33	167.04	202.3
செயற்திட்டச் செலவு	8.054	11.17	26.191	27.526	42.166	49.797	54.068	40.188	29.061	18.978	8.955
மேலதிகம்/ (போதாமை)	-2.747	-6.594	-0.741	-0.95	-6.577	10.187	29.295	10.815	21.077	-8.488	16.141
தேறிய நிலையான சொத்துக்கள்	43.715	35.248	46.246	35.772	34.88	34.567	29.296	27.087	19.472	16.717	105.635
நடைமுறைச் சொத்துக்கள்	16.308	19.882	20.938	20.725	31.84	38.935	65.458	84.688	108.423	108.756	128.952
உரிமம்	4.038	-1.309	0.801	-1.141	0.474	14.975	37.311	52.841	73.222	65.563	81.512
ஒதுக்கம்	6.557	7.671	9.614	12.985	11.968	13.71	16.757	20.582	24.957	25.748	26.859
நடைமுறைப் பொறுப்புக்கள்	5.712	13.519	10.522	8.881	19.397	10.25	11.389	11.264	10.244	17.444	20.581

தொழிற்படு செயற்திறன்

திட்டங்களை வகுத்தல்

இலங்கையின் பொருளாதார மற்றும் மனித வள அபிவிருத்தித் தேவைகளுக்கு ஏற்ப மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆராய்ச்சியைத் நடாத்துதல், திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல், தேசிய அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் தொழிற் சந்தை தகவல் அறிக்கைகளை தயாரித்து வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி துறையின் ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக இவ்வாணைக்குழு செயற்படுகிறது.

தொழில்துறை மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சி ஆய்வுகளை செயல்படுத்துதல்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி வட்டம், ஆராய்ச்சி வட்டம் மூலம் நடத்தப்படும். மேலும், பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஆராய்ச்சி நடவடிக்கைகள் நடத்தப்பட்டு, அந்த ஆய்வுகளின் தரத்தை பராமரிக்க தேவையான ஆலோசனைகள் வழங்கப்படும். 2005 இல் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி வட்டம், இதுவரை தொழில்துறை மற்றும் தொழில்துறைக்கான பல முக்கியமான ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளது.

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி துறையில் ஆராய்ச்சி கற்கைகளை செயற்படுத்துதல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி வட்டம் (Research Cell) TVET துறையில் ஆய்வுகளை மேற்கொள்கிறது. TVET துறையில் உள்ள பல்வேறு நிறுவனங்களின் அலுவலர்களால் ஆய்வுக் கற்றைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 2005 இல் தொடங்கப்பட்ட ஆராய்ச்சி வட்டமானது ஆராய்ச்சி நடவடிக்கைகளை வழிநடத்துவதுடன் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகளின் தரத்தை பராமரிக்கவும் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. ஆராய்ச்சி ஆய்வுகள் பற்றிய விவரங்கள் TVEC இணையதளத்தில் (www.tvec.gov.lk) வெளியிடப்பட்டுள்ளன.

No.	ஆராய்ச்சியின் பெயர்	குறிக்கோள்கள்	ஆராய்ச்சி-யாளர்கள்
01	குருநாகல் மாவட்டத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் கல்வி கற்கின்ற மாணவர்களின் போதைப்பொருள் பாவனை பற்றி ஆய்வு	TVET மாணவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாவதற்கான செல்வாக்குகள், அதற்கான காரணிகள், மாணவர்களின் ஆளுமைக்கு பாதிக்கும் செல்வாக்குகள் மற்றும் போதைப் பொருள் பாவனையைக் குறைப்பதற்கான பரிந்துரைகள்	தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்
02	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழுள்ள கல்வி சார் ஊழியர் வகையில் உள்ளடங்குகின்ற போதனாசி ரியர்களின் தக்கவைத்திருப்பதற்கு செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய ஆய்வு	தொழிற்பயிற்சி அதிகாரசபையில் போதனாசி ரியர்களை தக்கவைப்பதற்காக பிரதான அளவுகோல்களை யாவை எனக் கண்டறிதல்	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
03	மின்னணு- கற்றலை (e-learning) ஒரு கருவியாகப் பயன்படுத்தி கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மேம்படுத்துதல் (இலங்கையின் வட மாகாணத்தில் TVET துறையில் ICT பாடநெறிகள் பற்றிய ஆய்வு)	பல்வேறு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடநெறிகளில் e-learning முறையை தாபித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தலிலுள்ள சிக்கல்களை இனங்காணுதல்	தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்
04	இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள TVET பாடநெறிகளை அறிந்துகொள்வதற்கான GIS பகுப்பாய்வு	தென் மாகாணத்திலுள்ள பயிற்சி நிலையங்கள் மற்றும் நடாத்தப்படும் பாடநெறிகளை GIS தொழில்நுட்பத்தில் இனங் காணுதல், மாணவர்கள் தங்கள் பிரதேசங்களிலுள்ள பயிற்சி நிலைய அமைவிடங்களை புரிந்துகொள்ளல் மற்றும் அமைவிடத் தூராம் மற்றும் மாணவர்களின் பங்கெடுப்பு பற்றி ஆராய்தல்	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
05	தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பாக தொழிலதருநர்களின் வருங்கால எதிர்பார்ப்புகளின் தரம் மற்றும் சார்புத்தன்மை தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல்	“தொழில்” அடிப்படையில் “தொழிற் பயிற்சிப் பாடநெறிகள்” “தொழில் உலகத்திற்கு” செல்வாக்கு செலுத்துவதை தீர்மானித்தல்	இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
06	நெகிழ்வான கற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதற்கு பாதிக்கும் காரணிகள்	நெகிழ்வான கற்றல் முறையை நடைமுறைப்படுத்துவதற்கு பாதிக்கும் காரணிகளைக் கண்டறிதல்	மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு
07	இலங்கையில் கடல்சார் தொழிற் பயிற்சிப் பிரிவிலுள்ள மாணவர்களுக்கிடையே சுற்றுச்சூழல் கல்வியறிவு பற்றிய ஆய்வு	கடல்சார் TVET துறையில் சுற்றுச்சூழல் கல்வியறிவு மட்டத்தை அளத்தல், சுற்றுச்சூழல் கல்வியறிவு மட்டத்தை ஒப்பிடுதல், பாலின ரீதியாக சுற்றுச்சூழல் கல்வியறிவு மட்டத்தை ஒப்பிடுதல்	இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வித் துறைக்கான தேசிய அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு மற்றும் செயலாக்கம்

செப்டம்பர் 7, 1995 அன்று பயிற்சி நிறுவனங்களின் பதிவுக்கான அபிவிருத்தித் திட்டம் குறித்து ஒரு அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தேசிய அபிவிருத்தித் திட்டம் - 2022 தயாரிப்பு

துறை சார்ந்த பயிற்சி நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் துறை அமைச்சகத்தின் தொழிற் பயிற்சி தொடர்பான மூத்த உத்தியோகத்தர்களின் பிரதிநிதித்துவத்துடன் தேசிய அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டு சரிபார்க்கப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதனையடுத்து கௌரவஅமைச்சர் அதனை ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்ததுடன் அமைச்சின் செயலாளரின் கோரிக்கைக்கு அமைவாக அமைச்சரவை அறிக்கையும் தயாரிக்கப்பட்டு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள், தொழிற் துறைகள் மற்றும் மாகாணங்களில் தொழிற் சந்தையின் தேவைக்கேற்ப இனங்காணப்பட்ட தொழில்களின் தேவை மற்றும் வழங்கல் ஆகியவற்றுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்காக தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுவதுடன் அவை புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 21 தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 18 திட்டங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

கைத்தொழிற் துறைகளுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சி திட்டங்கள்


மாகாணங்களுக்கான தொழிற் கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்கள்

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டம்-2022 தயாரித்தல்

குளிர்பதன மற்றும் காற்றுச்சீரமைத்தல் தொழிற்துறை

தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திட்டத் தயாரிப்புச் செயற்திட்டத்தின் கீழ் குளிர்பதன மற்றும் காற்றுச்சீரமைத்தல் தொழிற்துறைக்கான திட்டத்தைத் தயாரிக்கும் பணி 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் தொடங்கப்பட்டது, இத்திட்டத்திற்கு சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் அலகு இதற்கான ஆலோசனை மற்றும் நிதிப் பங்களிப்பை வழங்குகிறது. 2022 ஆம் ஆண்டின் இறுதியில் வரைவுத் திட்டம் தயாரித்து முடிக்கப்பட்டதுடன், தொடர்புடைய தொழில்சார் கல்விப் பயிற்சித் திட்டத்திற்கான இரண்டு (02) செல்லுபடிதாக்கல் செயலமர்வுகள் (Validation Workshop) இதுவரை நடாத்தப்பட்டுள்ளன, மேலும் அவை ஏப்ரல் 2023 க்கு முன் இத்திட்டத்தை முழுமையாக நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்




மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையில் தற்போதைய தொழில் தேவை மற்றும் பிற தொழிற்சந்தை தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிற் சந்தை தகவல் முறைமையை நிறுவியுள்ளது. தரவு கணக்கெடுப்பு மற்றும் பகுப்பாய்விலிருந்து பெறப்படும் தகவல்கள் மற்று புள்ளிவிபரங்கள் கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டுநர்கள், வேலைவாய்ப்பு முகவர்கள், பயிற்சியாளர்கள், தொழில்தருநர்கள் மற்றும் தொழில் நாடுவோர்கள் போன்றவர்களின் நலனுக்காக தொழிற்சந்தை தகவல் பருவ இதழாக வெளியிடப்பட்டுள்ளது (www.tvec.gov.lk LMI Bulletin).

தொழிற்சந்தை தகவல் வெளியீடு - 2022

2022 ஆம் ஆண்டில் இரண்டு (02) தொழிற்சந்தை பருவ இதழ்களை வெளியிட முடிந்தது. இந்த வெளியீடுகள் மூலம், 2021 இன் இரண்டாம் அரையாண்டு மற்றும் 2022 இன் முதல் அரையாண்டில் இலங்கை தொழிற் சந்தையின் தன்மை ஐந்து (05) வெளிப்படையான பிரிவுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தொழிற்சந்தை தகவல் வெளியீடானது ஒவ்வொரு தொழிற்துறையிலும் உள்ள வேலை வாய்ப்புகள், தகைமைகள், பாலினம் மற்றும் அனுபவம், அத்துடன் உள்ளூர் மற்றும் சர்வதேச தொழிற் தேவை பற்றிய தகவல் உள்ளிட்ட வேலை வாய்ப்புகள் பற்றிய விவரங்களை வழங்குகிறது.




2006 முதல் 2021 வரை ஒவ்வொரு ஆண்டும் "இரிதா லங்காதீப" மற்றும் "சண்டே ஒப்சர்வர்" நாளிதழ்கள் மூலம் கணக்கெடுக்கப்பட்ட விளம்பரங்களின் அடிப்படையில் தொகுக்கப்பட்ட வேலைவாய்ப்பு விளம்பரங்களின் எண்ணிக்கை.

வருடம்	வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களின் தொகை
2006	104,839
2007	113,060
2008	116,157
2009	82,167
2010	124,741
2011	108,193
2012	136,994
2013	107,698
2014	91,430

வருடம்	வேலைவாய்ப்பு தொடர்பான விளம்பரங்களின் தொகை
2015	81,369
2016	74,245
2017*	226,555
2018	215,991
2019	160,933
2020	123,003
2021	144,157
2022	117954
மொத்தம்	**627534**

2006 - 2021 வரை இருந்த வேலைவாய்ப்பு விளம்பரங்கள்



(*2017 ஆம் ஆண்டு தொடக்கம் சிலுமின பத்திரிகைக்கு பதிலாக லங்காதீப எடுக்கப்பட்டுள்ளது)

தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள்

தொழிற்கல்விப் பயிற்சித் திட்டங்களின்படி இனங்காணப்பட்ட தொழிற்துறைகளில் தொழில் தேவை மற்றும் வழங்கலுக்கு ஏற்ப தேசிய தொழிற்திறன் தகுதி கட்டமைப்பை செயல்படுத்துவதற்காக, தொழில்கள் தொடர்பான தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் தேர்ச்சிசார் பாடவிதானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதற்கமைய, புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2022

தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் (NVQ Level) மற்றும் தொடர்புடைய தொழிற்துறைகள்

(தொழில்களின் படி)

மட்டம் 03

- கட்டுமான உபகரணம் இயக்குபவர் (க்ரோலர் டோசர்)
- கட்டுமான உபகரணம் இயக்குபவர் (பம்ப்கார்)
- கட்டுமான உபகரணம் இயக்குபவர் (எக்ஸ்கவேட்டர்)
- சாந்திடுபவர்
- கட்டுமான உபகரணம் ஆபரேட்டர் (பெக்கோலோடர் வீல் லோடர்)
- மருத்துவ ஆய்வக உதவியாளர்

மட்டம் 03 மற்றும் 04

- தொலைத்தொடர்பு கோபுர தொழில்நுட்ப வினைஞர்
- மத்திய மலட்டுச் சேவை துறை தொழில்நுட்ப வினைஞர்
- லேடெக்ஸ் சார்ந்த உற்பத்திப்பொருள்கள் தொழில்நுட்ப வினைஞர்
- விளையாட்டு பொருள் தயாரிப்பு வினைஞர் (மரத்தினாலான)

மட்டம் 4

- இசைக்கலைஞர் (பாடகர்)
- சத்திரசிகிச்சைக் கூடம்
- வரவேற்பாளர் (மருத்துவ சேவைகள்)
- விரைவு சேவை உணவக (QSR) குழு உறுப்பினர்
- செய்மதி தொலைக்காட்சி மற்றும் அகல அலைவரிசை (புரோட்பேண்ட்) தொழில்நுட்ப வினைஞர்
- ஆயுர்வேத உருவுகை (மசாஜ்) சிகிச்சையாளர்
- செயற்கை உறுப்பு தயாரிப்பு தொழில்நுட்ப வினைஞர்
- கூட்டுறவு முகாமையாளர்
- மருந்துப்பொருள் உற்பத்தி தொழில்நுட்ப வினைஞர்
- மேடை ஒளியேற்றல் தொழில்நுட்ப வினைஞர்

மட்டம் 5

- ஆடை வியாபாரஞ் செய்தல் முகாமைத்துவம்
- ஆடை தயாரிப்பு அபிவிருத்தி தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம்
- தகவல் மற்றும் சைபர் பாதுகாப்பு தொழில்நுட்பம்
- மின்னணு ஊடகம்

- புடவை வண்ணமயமாக்கல் மற்றும் முடித்தல் தொழில்நுட்பம்
- வழங்கல் மற்றும் பொருள் முகாமைத்துவம்
- காப்புறுதி தொழில்நுட்ப மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
- தீயணைப்புப் பொறியியல் தொழில்நுட்பம்
- டிஜிட்டல் மீடியா தொழில்நுட்பம்

மட்டம் 5 மற்றும் 6

- மனித வள முகாமைத்துவம்

மட்டம் 6

- மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பம்
- நூலக மற்றும் தகவல் சேவைகள்

புதிய தேசிய தேர்ச்சித் தரங்கள் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்ட தொழில்கள் - 2022

தேசிய தொழிற்திறன் தகுதி மட்டங்கள்

மட்டம் 2 மற்றும் 3

- தென்னை வளர்ப்பு உதவியாளர்
- தேங்காய் வெட்டும்கருவி இயக்குபவர்
- தேங்காய் பிரிப்பவர்
- மழை உறை பொருத்துபவர்

மட்டம் 3

- வீட் இறப்பர் முறைவழியாக்குபவர்
- கித்துள் புரிவெட்டி வினைஞர்

மட்டம் 2, 3 மற்றும் 4

- பொறி இயக்குபவர் (வடம்/கேபிள் உற்பத்தி)

இற்றைப்படுத்தப்பட்ட தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2022

மட்டம் 2 மற்றும் 3

- குளிர்பதன மற்றும் காற்றுச்சீராக்கல் வழங்கத்துலக்கல் வினைஞர்
- வசிப்பிட வீட்டுக்காப்பாளர்

மட்டம் 2, 3 மற்றும் 4

- வதிவிட பராமரிப்பாளர்
- அலுமினியம் புனைபவர்
- மணிக்கல் வெட்டுபவர்
- லித்தோ பொறி இயக்குபவர்
- தையற்கலை வினைஞர்
- கட்டுமான உபகரண தொழில்நுட்ப வினைஞர்
- நகை தயாரிப்பவர்

மட்டம் 3

- மருத்துவமுறைக் குருதிவடிப்பு வினைஞர்

மட்டம் 3 மற்றும் 4

- கேக் அலங்கரிப்பவர்
- தாவர நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்

- சிகையலங்கரிப்பாளர்
- பாதணி தயாரிப்பு வினைஞர்
- மின்சாரத்தொழில்வலர்
- கட்டுமானத்தொழில் வினைஞர் (மேசன்)
- ஸ்கூபா சுழியோடி
- சாரதி
- மோட்டார் வாகன தீந்தை பூச்சு வினைஞர்
- தோல் பொருள் உற்பத்தி வினைஞர்
- மரவேலை வினைஞர் (கட்டிடம்)

மட்டம் 4

- தர உத்தரவாத மேற்பார்வையாளர் (ஆடை உற்பத்தி)
- பயண வழிகாட்டி
- படப்பிடிப்புக் கலைஞர்
- தயாரிப்பு உதவியாளர்

மட்டம் 5

- கடலோட்டு என்ஜின் மற்றும் இயந்திர பராமரிப்பு தொழில்நுட்பம்
- தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி கற்பிப்பு

மட்டம் 5 மற்றும் 6

- சுற்றுலா மற்றும் சுற்றுப்பயண முகாமைத்துவம்
- காய்ச்சி இணைத்தல் (வெல்டிங்) தொழில்நுட்பம்
- பாலர் பராமரிப்பு தொழில்நுட்பம்
- நகை வடிவமைப்பு மற்றும் உற்பத்தி தொழில்நுட்பம்
- மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்
- முன்பள்ளி முகாமைத்துவம்

மட்டம் 6

- தொலைத்தொடர்பு தொழில்நுட்பம்

தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் மொழிபெயர்ப்பு அலுவல்கள்

சிங்கள மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2022

- கட்டுமான உபகரணம் இயக்குபவர்
- மின்வேலி பராமரிப்பு உதவியாளர்
- மோட்டார் வாகன பொறிவலர்/ தொழில்நுட்ப வினைஞர்
- மோட்டார் சைக்கிள் பொறிவலர்
- விற்பனை பிரதிநிதி
- சிறுவர் பராமரிப்பு மற்றும் சிகிச்சை உதவியாளர்
- ஆடை வடிவமைப்பு தொழில்நுட்ப வினைஞர்
- தாவர நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்
- இலவங்கப்பட்டை (கறுவா) தொழிற்சாலை செயல்பாடுகள்
- தர உத்தரவாத மேற்பார்வையாளர் (ஆடை தயாரிப்பு)
- நகராட்சி திடக்கழிவு பணி மேற்பார்வையாளர்
- தொலைத்தொடர்பு கோபுர தொழில்நுட்ப வினைஞர்

தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் - 2022

- கருவி, அச்சு மற்றும் வார்ப்பு தயாரிப்பவர்
- நகராட்சி திடக்கழிவு பணி மேற்பார்வையாளர்
- மின்சாரத்தொழில்வலர்
- மோட்டார் வாகன பொறிவலர்/ தொழில்நுட்ப வினைஞர்
- க்ரோலர் உந்துருளி (டிராக்டர்) இயக்குபவர்

- டீசல் பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) பராமரிப்பு தொழில்நுட்ப வினைஞர்
- தர உத்தரவாத மேற்பார்வையாளர் (ஆடை தயாரிப்பு)
- அலுமினியம் புனைபவர்

புதிய தேர்ச்சித் தரங்கள் வெளியீடு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

புதிய தேசிய தேர்ச்சித் தரங்களை தயாரித்து, ஏற்கனவே உள்ள தேசிய தேர்ச்சித் தரங்களைப் புதுப்பித்த பிறகு, அது குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு தெரிவிக்க நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2022

ஆண்டில் பின்வரும் துறைகளுக்காக அவ்வாறான மூன்று (03) நிகழ்ச்சிகள் ஆன்லைன் (Online) மூலம் நடத்தப்பட்டன.

- சுகாதாரத் துறை
- கூட்டுறவுத் துறை
- தொலைத்தொடர்பு துறை

நிறுவனங்களுக்கு இடையேயான தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) வழிகாட்டல் குழு கூட்டங்களை நடாத்துதல்

தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றிற்கு தீர்வு காணவும் மற்றும் புதுமைகளை நடைமுறைப்படுத்தவும் தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையை நடைமுறைப்படுத்தும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்ட வழிநடத்தல் குழுவொன்று (Steering Committee) நிறுவப்பட்டுள்ளது..

2022

ஆம் ஆண்டில் ஏழு (07) குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை குழு

தேசிய தேர்ச்சித் தரங்கள் அபிவிருத்தி மற்றும் கண்காணிப்பு குழுவானது தேசிய தேர்ச்சித் தரங்களை மேம்படுத்தவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தையின் தேவையை கருத்திற் கொண்டு அனுமதி வழங்கவும், தேசிய தேர்ச்சித் தரங்களின் தரத்தன்மையப் பேணவும், தேசிய தேர்ச்சி தரங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை தயாரிப்பதில் எழும் சிக்கல்களைத் தீர்க்கவும் நிறுவப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

2022

ஆம் ஆண்டில், மேற்கூறிய குழுவின் தொடர்புடைய முடிவெடுத்தல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்வதற்காக எட்டு (08) கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பயிற்சி நிறுவனங்களுக்கான தர உத்தரவாத நடைமுறைகள் கடைபிடிப்பு

1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விச் சட்டம் மற்றும் பயிற்சி நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான அபிவிருத்தித் திட்டம் (அதிவிசேட வர்த்தமானி இல. 887/8 செப்தெம்பர் 7, 1995) என்பவற்றின் பிரகாரம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு நான்கு (04) கட்ட தர உத்தரவாத முறையை பின்பற்றுகிறது. அவையாவன.

- தொழிற் பயிற்சி நிறுவன பதிவு
- பாடநெறி தராதர அங்கீகாரம்
- தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு
- தர மேம்பாட்டு முறைமையை நிறுவுதல் (QIS)

தொழிற் பயிற்சி நிறுவன பதிவு

தொழிற்பயிற்சி அளிக்கும் பயிற்சி நிறுவனங்கள் இவ் ஆணைக்குழுவின் கீழ் நிறுவனப் பதிவைப் பெறுவது சட்டப்பூர்வமான தேவையாகும். அதன்படி, நாட்டில் இயங்கும் அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களும்/ நிறுனங்களும் ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். மேற்கூறிய சட்டத்தின்படி, பதிவு செய்வதற்கான மதிப்பீட்டின்போது பயிற்சிக்காக வழங்கப்பட்ட ஆவணங்கள், சான்றுகள் மற்றும் முறைகள், பௌதீக மற்றும் மனித வளங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தொடர்புடைய அளவுகோல்களுக்கமைய/ பிரமாணங்களுக்கை பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் ஆணைக்குழு இரண்டு ஆண்டு கால பதிவை நிறுவனங்களுக்கு வழங்கும். 2022 ஆம் ஆண்டின் இறுதியில், 1,160 தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவு செல்லுபடியாக இருந்ததுடன், அவற்றில் 546 அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளுக்கு உரிமையானதுடன் மற்றும் 614 தனியார்/அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உரிமையானவை.

2022

ஆம் ஆண்டு செயல் திட்டத்தின் படி, 600 நிறுவனங்களை பதிவு செய்ய இலக்கு வைத்திருப்பினும் முந்தைய விண்ணபங்களுடன் சுமார் 970 நிறுவனங்களை மதிப்பீடு செய்ய இவ் ஆணைக்குழுவுக்கு இயலாயிருந்தது.

வகைப்பாட்டின் படி பயிற்சி நிறுவனப் பதிவு 2022க்கான மதிப்பீடுகள் (புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட பதிவு)

மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை	மதிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை		
	புதிய பதிவு	பதிவு புதுப்பிப்பு	மொத்தம்
இலக்கு	100	500	600
பெறப்பட்ட விண்ணப்பங்கள்	402	521	923
மதிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை	355	615	970

2022 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவனங்கள் உரிமையின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டன..

உரிமை	பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை		
	புதிய பதிவு	பதிவு புதுப்பிப்பு	மொத்தம்
அரச	01	123	124
தனியார்	131	320	451
மொத்தம்	**132**	**443**	**575**

பதிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களின் பதிவுகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்குதல்

வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சியளிக்கப்பட்ட சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களின் பதிவை உறுதிப்படுத்தும் வகையில் வெளிவிவகார அமைச்சுக்கு கடிதங்கள் வழங்கப்படுகின்றன. 2022 ஆம் ஆண்டில் இது போன்ற சுமார் 2,166 கடிதங்கள் வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டன.

பாடநெறி தராதர அங்கீகாரம்

தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறு 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏதேனும் தொழிலுக்கான NVQ தகுதிகளை வழங்க தேசிய தேர்ச்சித் தரம் தயாரிக்கப்பட வேண்டும். தேர்ச்சி தரங்களுக்கு ஏற்ப தேசிய பாடவிதானங்கள் தயாரிக்கப்படுவதுடன், தேர்ச்சிசார் பயிற்சியின் கீழ் நடாத்தப்படும் பாடநெறிகளின் தராதர அங்கீகாரம் இவ் ஆணைக்குழுவால் வழங்கப்படுகிறது..

2022

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீடுகளின் எண்ணிக்கை பின்வருமாறு. தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகள் மூலம் பயிற்சி பெறும் மாணவர்களின் இறுதிக் கணிப்பீட்டை இவ் ஆணைக்குழு நடாத்தப்படுவதுடன் பெறுபேறுகளின் அடிப்படையில் NVQ தகுதி வழங்கப்படுகிறது.

.

கணிப்பீடுகளின் எண்ணிக்கை	பாடநெறி தராதர அங்கீகார கணிப்பீட்டு எண்ணிக்கை		
	புதிய அங்கீகாரம்	அங்கீகாரம் புதுப்பிப்பு	மொத்தம்
இலக்கு	300	300	600
கணிப்பீடு செய்யப்பட்ட எண்ணிக்கை	614	1134	1748

2022 ஆம் ஆண்டில் இவ். ஆணைக்குழுவால். தராதர. அங்கீகாரம் அளிக்கப்பட்ட. மொத்த. பாடநெறிகளின். எண்ணிக்கை 1390 ஆவதுடன் நிறுவனங்களின் உரிமையின் அடிப்படையில் அவை கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

உரிமை	தராதர அங்கீகாரமளிக்கப்பட்ட பாடநெறிகள்		
	புதிய பாடநெறி	தராதர அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்ட பாடநெறி	மொத்தம்
அரச	235	636	871
தனியார்	267	252	519
மொத்தம்	**502**	**888**	**1390**

தர முகாமைத்துவ முறைமை நிறுவல் மற்று சான்றளிப்பு

எந்தவொரு பயிற்சி நிறுவனமும் வழங்கும் சேவையை உயர் தரத்தில் செயல்படுத்த நிறுவனமானது தர முகாமைத்துவ முறைமையை நிறுவி அதனை கொண்டு நடாத்திச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது. தரத்தைப் பேணும் நோக்கத்துடன் பயிற்சி நிறுவனங்களில் தர முகாமைத்துவ முறைமையொன்றை மூன்றாம் நிலைகல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது. இம்முறைமையானது ISO 9001:2008 மற்றும் SLS IWA 2/ 2007 ஆகிய தர நிர்ணயங்களுக்கமைவாக செயற்படுத்தப்படுகிறது. பாடநெறி தராதர அங்கீகாரத்துக்கு மேலதிகமாக தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 மற்றும் 06 பாடநெறிகளைத் தொடங்கும் அனைத்து நிறுவனங்களும் இத் தர முகாமைத்துவ முறைமையை நிறுவ வேண்டும்.

2022

2022 ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நிலைமை மற்றும் சமூக பொருளாதார நெருக்கடி காரணமாக, வளப்பற்றாக்குறை மற்றும் பயிற்றுவிப்பு பொருட்களை பெற்றுக்கொள்வதில் சிரமம் போன்ற காரணங்களால், பயிற்சி நிறுவனங்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டதனால் பயிற்சி நிறுவனங்களில் தர முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கான கணக்காய்வு நடாத்தப்படவில்லை.

தர மேம்பாட்டு முறைமையை நிறுவுதல் (QIS)

தொழில்துறை பயிற்சி மற்றும் கார்ப்பரேட் பயிற்சியின் வெற்றி குறித்து தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து கருத்துக்களைப் பெறுவது தர மேம்பாட்டு முறைமையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். 2022 ஆம் ஆண்டிற்குள் கூட, கோவிட் தொற்றுநோயின் காரணமாக முன்பு போல் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி நடவடிக்கைகள் இல்லாததால் தர மேம்பாட்டு முறைமையை நிறுவுமாறு பயிற்சி நிறுவனங்களிடம் கோரப்படவில்லை.

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) விருதளித்தல்

தரக் கட்டுப்பாட்டு முறையொன்றாக தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் தரத்தைப் பாதுகாக்க உதவும் முறைமைகளை அபிவிருத்தி செய்து பராமரித்து தர உத்தரவாதம் மற்றும் கணிப்பீட்டு ஒழுங்குபடுத்தல்கள் மூலம் மிக உயர்ந்த தரத்தில் தேசிய தொழிற்திறன் தகுதி விருதளித்தல் இடம்பெறுகிறது.

இங்கு, தேர்ச்சி பெற்றவர்கள் நான்கு (04) முக்கிய முறைகளின் கீழ் கணிப்பீடு செய்யப்படுவார்கள்.

- தேர்ச்சிசார் பயிற்சி (CBT)
- முந்தைய கற்றல் அங்கீகரிப்பு (RPL)
- நிறுவனசார் பயிற்சி (பயிலுநர்கள்) (EBT)
- நெகிழ்வான கற்றல் முறை (தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள்) (FLM)

மேற்குறிப்பிட்ட முறையின் கீழ் தோற்றும் தேர்வுநாடிகளின் தேர்ச்சி பற்றிய கணிப்பீடு தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையின் படி மூன்று பிரதான வழிகளில் கணிப்பீடு மேற்கொள்ளப்படும்..

- அறிவுசார் கணிப்பீடு (Knowledge Assessment)
- செய்முறை கணிப்பீடு (Practical Assessment)
- நேர்முகத் தேர்வு (Viva Voce)

அறிவுசார் கணிப்பீடு (எழுத்துமூல கணிப்பீடு)

தேசிய தொழிற்திறன் தகுதி முறைமையின் கீழுள்ள 13 தொழில்களுக்கான கோட்பாட்டு அறிவைச் சோதிப்பதற்காக நாடளாவிய ரீதியில் பொது எழுத்துமூல தேர்வு நடாத்தப்படுகிறது. இத்தொழில்களின் மட்டம் 04 தகுதிகளுக்கு மட்டுமே நடாத்தப்படுகிறது..

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 04 ஐ விருதளிப்பதற்காக பொது எழுத்துமூல பரீட்சை நடாத்துதல்

2022 ஆம் ஆண்டில் 13 தொழில்களின் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 இற்காக நடாத்தப்பட்ட பொது எழுத்துமூலத் தேர்வில் பங்கெடுத்தவர்கள் மற்றும் சித்தியடைந்தவர்களின் புள்ளிவிபரங்கள் பின்வருமாறு

2022 ஆம் ஆண்டில் பலத்த சவால்களுக்கு மத்தியிலும் 13 தொழில்களுக்காக நான்கு (04) எழுத்துமூலத் தேர்வுகள் நடாத்தப்பட்டன.

வருடத்தில் தேர்வுகள் நடாத்தப்பட்ட மாதங்கள்	விண்ணப்பித்த தேர்வுநாடிகளின் எண்ணிக்கை	சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை
ஜனவரி	5701	3106
ஏப்ரல்	8683	6097
ஜூலை	10947	7679
திசெம்பர்	15590	11176

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 05 மற்றும் 06 இற்கான. எழுத்துமூல. பரீட்சை நடாத்துதல்

தனியார் துறையில் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 ஆகிய பாடநெறிகளுக்கான எழுத்துத் தேர்வுகளை அந்த பாடநெறிகளின் தராதர அங்கீகாரம் பெற்ற அதே பயிற்சி நடத்தவும் அதற்கான அனுமதியை ஆணைக்குழுவிடம் கோருவதன் அடிப்படையில் எழுத்துமூல தேர்வுகள் நடாத்தப்படுகின்றன.

மேலும், பொதுத் துறையிலே தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளின் எழுத்துமூல தேர்வுகள் அந்தந்த பயிற்சி நிறுவனங்களால் நடாத்தப்படுகின்றன..

2022

தனியார் துறையில் தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 மற்றும் 6 பாடநெறிகளின் பொது எழுத்துமூலத் தேர்வு, தொடர்புடைய நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் 2022 இல் நடாத்தப்பட்டது, பின்வரும் துறைகளுக்கு 58 தேர்வுகள் நடத்தப்பட்டன..

- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
- கணிய அளவீடு
- கட்டுமான தொழில்நுட்பம்
- எழிலியல்/ அழகியல்
- விவசாய உற்பத்தி தொழில்நுட்பம்
- பொறி-இலத்திரனியல் (மெகாட்ரானிக்ஸ்) தொழில்நுட்பம்
- குளிர்பதன மற்றும் காற்றுசீராக்கல் தொழில்நுட்பம்
- உற்பத்தி தொழில்நுட்பம்
- முன்பள்ளி முகாமைத்துவம்
- அச்சிடல் தொழில்நுட்பம்
- படவரைவு தொழில்நுட்பம்
- மோட்டார் வாகனத் தொழில்நுட்பம்

செய்முறை கணிப்பீடு

தேர்ச்சிசார் பயிற்சி (CBT) பெற்ற தேர்வுநாடிகளுக்கு அவர்கள் பயின்ற பாடநெறி தராதர அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திலேயே செய்முறைக் கணிப்பீடு நடாத்தப்படுவதுடன் மற்றைய முறைகளினூடாக தோற்றும் தேர்வுநாடிகளுக்கான கணிப்பீடு தராதர அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிலையத்திலோ அல்லது முன் அனுமதி பெறப்பட்ட நிலையத்தில் நடாத்தப்படும். நடாத்தப்படும் கணிப்பீட்டிலே சம்பந்தப்பட்ட தொழிற்துறையிலுள்ள இரண்டு (02) கணிப்பீட்டாளர்களின் பங்கேற்புடன் தேர்வுநாடிகளின் செய்முறைத் தேர்ச்சி சோதிக்கப்படும். இப் பணியைச் மேற்கொள்வதற்கான சில முக்கிய அலுவல்கள் பின்வருமாறு,

- தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரியைப் பராமரித்தல்
- கணிப்பீடு கண்காணிப்பு
- தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் விருதளிப்பு

தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரி

மதிப்பீட்டாளர்களின் நியமனம் மற்றும் பயிற்றுவிப்பு

ஒவ்வொரு துறையிலும் திறமையும் நிபுணத்துவமும் கொண்ட தகுதிவாய்ந்த நபர்கள் இவ் ஆணைக்குழுவில் கணிப்பீட்டாளர்களாக பதிவு செய்யப்படுவதுடன் மற்றும் தேசிய தொழிற்திறன் தகுதிகளை விருதளிப்பதற்கான செய்முறை கணிப்பீடுகளை மேற்கொள்வதற்காக தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரியை இவ் ஆணைக்குழு பராமரித்து வருகின்றது. TVET துறையிலே NVQ கணிப்பீடுகளை நடாத்துவதற்கான தன்னியக்க கணிப்பீட்டு கோரல் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இப்பதிவுக்களரியிலிருந்தே கணிப்பீடுகளுக்காக தேர்ச்சிசார் கணிப்பீட்டாளர்கள் தன்னியக்க முறையில் நியமிக்கப்படுகிறார்கள்.

2022 ஆம் ஆண்டு முடிவடையும் தறுவாயில் பதிவுக்களரியில் சுமார் 3,905 கணிப்பீட்டாளர் பதிவுசெய்யப்பட்டிருந்தனர். மேலும் 2022 இல் பதிவுக்களரியிலுள்ள அனைத்து கணிப்பீட்டாளர்களின் தகவல்களையும் புதுப்பிப்பதன் மூலம் கணிப்பீட்டு நடைமுறையின் செயற்திறன் மற்றும் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய, செயல்நிலையில் இல்லாத 164 கணிப்பீட்டாளர்கள் பதிவுக்களரியிலிருந்து மீளாய்வாண்டில் தற்காலிகமாக நீக்கப்பட்டனர்.

2022 ஆம் ஆண்டில் அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுபவர்களை தேர்ச்சிசார் கணிப்பீட்டாள்ரகளாக நியமிப்பதற்காக புதினப்பத்திரிகைகளில் இரண்டு (02) விளம்பரப்படுத்தி விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்களுக்காக சம்பந்தப்பட்ட தொழில்கள் குறித்து நிபுணத்துவம் பெற்றவர்கள் மூலம் நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். 2022 ஆம் ஆண்டில் 19 நாட்கள் இதுபோன்ற நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டன, மேலும் 2022 இல் 299 பேர் கணிப்பீட்டாளர் பதிவுக்களரியில் சேர்க்கப்பட்டனர். மீளாய்வாண்டில் கணிப்பீட்டாளர்களைப் பயிற்றுவிப்பதாக 12 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தால் நான்கு (04) செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. எமது ஆணைக்குழு மற்றும் Youlead ஆகியவற்றால் இச்செயலமர்வுகளுக்காக பணம் செலவிடப்பட்டது.

தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை ஒழுங்குபடுத்துதல்

இதன் கீழ், இதுவரை கணிப்பீட்டாளர்களை நியமிக்கும் செயல்முறையை திறம்படச் செய்யும் வகையில், டிஜிட்டல் முறையில் கணிப்பீட்டாளர்களை நியமிக்கவும், கணிப்பீடுகளை நடாத்தும் திகதிகளை நிர்ணயிக்கவும் கணினிமயப்படுத்தப்பட்ட முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் டிஜிட்டல் முறையின் மூலம், முந்தைய குறைகளையும் தவறான சம்பவங்களையும் குறைக்க முடிந்துள்ளது. அதற்கமைய, CBT, EBT, RPL மற்றும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட FLM ஆகிய நான்கு (04) முறைகளினூடான கணிப்பீட்டிற்கு கணினிமயப்படுத்தப்பட்ட முறையினூடாக கணிப்பீட்டாளர் நியமனம் தற்போது இடம்பெறுகிறது. இதன் மூலம், கணிப்பீட்டாளர்களை நியமிக்கும் பணியின் தரம் கணிசமாக மேம்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்புடைய அளவுகோல்கள் பரிசோதிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில், ஆணைக்குழுவால் பராமரிக்கப்படும் பதிவுக்களரியிலுள்ள கணிப்பீட்டாளர்கள் கணிப்பீட்டிற்காக நியமிக்கப்பட்டு, அவர்களால் கணிப்பீட்டு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

2022 ஆம் ஆண்டில் பயிற்சி நிலையங்களால்/ நிறுவனங்களால் NVQ மட்டம் 1-4 வரையான கணிப்பீடுகளை நடாத்துவதற்கான இவ்வாணைக்குழுவுக்கு கோரியதுடன் தனியார் துறை கோரிய அவ்வாறான 1,136 கோரிக்கைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட முறையின் மூலம் கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், NVQ மற்றும் 5 மற்றும் 6 இறுதிக் கணிப்பீடுகளை நடாத்துவதற்கு விண்ணப்பித்த 492 கணிப்பீடுகளுக்கும் கணிப்பீட்டாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

தேர்ச்சிசார் கணிப்பீட்டு அலுவல்களை மேற்பார்வை செய்தல்

பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கணிப்பீட்டாளர்கள் ஆணைக்குழுவால் வழங்கப்படுகின்ற விதிமுறைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டுதல் கையேடுகள் மற்றும் கணிப்பீட்டுக் கொள்கைகளின்படி கணிப்பீட்டு செயல்முறையை நடத்த வேண்டும். இந்தச் செயல்முறை சரியாக நடக்கிறதா என்பது ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் எழுந்தமானான கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. NVQ சுற்றறிக்கை இலக்கம் 2017/1 இன்படி மற்றும் ஆணைக்குழு உயர் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களின்படி கணிப்பீடுகள் தவறாக மேற்கொள்ளப்பட்டிருந்தால், நிறுவனங்களுக்கும் கணிப்பீட்டாளர்களுக்கும் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதலும் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

2022 ஆம் ஆண்டில், பொது மற்றும் தனியார் துறை பயிற்சி நிறுவனங்களில் நடத்தப்பட்ட 77 தேர்ச்சிசார் கணிப்பீடுகள் இவ் ஆணைக்குழுவால் கண்காணிக்கப்பட்டன.

கணிப்பீட்டு முடிவுகளின் பிரகாரம், NVQ சுற்றறிக்கை இலக்கம் 2017/1 இன் படி மற்றும் உயர் நிர்வாகத்தின் ஆலோசனையின் பேரில், கணிப்பீட்டாளர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் மற்றும் அவர்கள் முரணாக செயல்பட்ட சந்தர்ப்பங்களில் தொடர்புடைய ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அத்துடன், கணிப்பீடு தொடர்பான பயிற்சி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் பிரகாரம் ஐந்து (05) விசாரணைகள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகளுக்கான NVQ கணிப்பீடுகளில் நியாயமான விட்டுக்கொடுப்பு நியாயமான விட்டுக்கொடுப்பு பற்றி கணிப்பீட்டாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் (சுற்றறிக்கை 01/ 2020 படி)

Skills for Inclusive Growth (S4IG) நிறுவனம் இது தொடர்பாக கணிப்பீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்க உதவியை நல்கியது. அதன்படி, ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் இதுவரை 50 கணிப்பீட்டாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்..

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) சான்றிதழ் வழங்குதல்.

தேசிய தொழிற்திறன் தகுதி கணிப்பீட்டுச் செயல்முறையை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் விருதளிக்கப்படுகிறது. கணிப்பீட்டாளர்களால் அளிக்கப்படும் கணிப்பீட்டு முடிவின் பெறுபேறுகள் அந்தந்த பயிற்சி நிறுவனங்களால்/ முகவர்களால் கணினி முறையினூடாக ஆணைக்குழு தரவுத்தளத்தில் (TVEC database) செலுத்தப்படுகிறது. ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் ஆவணங்களையும் மற்றும் கணிப்பீட்டாளர் வழங்கிய பிற சான்றுகளையும் சரிபார்த்து அனுமதி வழங்கிய பின்பே தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டிலே NVQ மட்டம் 1-6 வரைக்குமான 117,954 சான்றிதழ்கள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. திறன் அடிப்படையிலான மதிப்பீடு (CBT), தொழில் சார்ந்த பயிற்சி (EBT) மற்றும் முன் அறிவு (RPL) ஆகிய முறைகளினூடாகவே இச்சான்றிதழ்கள் அனைத்தும் வழங்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டில் தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கை மற்றும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள் (நிறுவன ரீதியாக)

நிறுவனம்	சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கை				அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள்			
	CBT	RPL	EBT	Total	CBT	RPL	EBT	மொத்தம்
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்	8448	161	0	8609	9607	175	0	9782
தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	1769	7364	39442	48575	2149	7969	39911	50029
தொழிற்பயிற்சி அதிகாரசபை	17551	2742	0	20293	22301	3131	0	25432
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	4244	0	0	4244	4903	0	0	4903
தனியார் துறை	24139	0	0	24139	27808	0	0	27808
மொத்தம்	**56151**	**10267**	**39442**	**105860**	**66768**	**11275**	**39911**	**117954**

2022 ஆம் ஆண்டில் மட்டங்கள் ரீதியாக வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களின் விபரம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

நிறுவனம்	01 ஆம் மட்டம்	02 ஆம் மட்டம்	03 ஆம் மட்டம்	04 ஆம் மட்டம்	05 ஆம் மட்டம்	06 ஆம் மட்டம்	மொத்தம்
தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	12	2138	39815	8064	0	0	50029
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்	0	249	2817	5128	1354	234	9782
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	0	343	2082	2478	0	0	4903
தொழிற்பயிற்சி அதிகாரசபை	138	797	10300	14011	175	11	25432
தனியார் துறை	0	837	16234	8824	903	1010	27808
மொத்தம்	**150**	**4364**	**71248**	**38505**	**2432**	**1255**	**117954**

மூலாதாரம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத்தளம்

2022 ஆம் ஆண்டில் பயிற்சி நிறுவனங்களால் விருதளிக்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதிச் சான்றிதழ் விபரம் (பெண்/ ஆண் அடிப்படையில்) கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

ஆண்டுக்கான தேசிய தொழில் தகுதிச் சான்றிதழ்கள் (பெண்/ஆண் ரீதியாக)

நிறுவனம்	சான்றிதழ்களின் எண்ணிக்கை			சான்றிதழாளர்களின் எண்ணிக்கை		
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்
தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம்	6709	3073	9782	5603	3003	8606
தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	33346	16683	50029	32202	16311	48513
தொழிற்பயிற்சி அதிகாரசபை	15906	9526	25432	12218	8068	20286
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்	1598	3305	4903	1393	2851	4244
தனியார் துறை	16742	11066	27808	14615	9524	24139
மொத்தம்	**74301**	**43653**	**117954**	**66031**	**39757**	**105788**

மூலாதாரம்: மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தரவுத்தளம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு 2022 ஆம் ஆண்டில் 1,325 சான்றிதழ்களை மீள அச்சிட்டது. அது பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

மீள அச்சிடப்பட்ட சான்றிதழ்கள்- 2022

சான்றிதழ் வகை	சான்றிதழ்களின் எண்ணிக்கை
அச்சுப்பிழை காரணமாக மீண்டும் அச்சடிக்கப்பட்ட சான்றிதழ்கள்	693
தொலைந்த சான்றிதழ்களுக்காக அச்சடிக்கப்பட்ட நகல் சான்றிதழ்கள்	632
மொத்தம்	**1325**


2006 தொடக்கம் 2022 வரை வழங்கப்பட்ட NVQ சான்றிதழ்களின். புள்ளிவிபரயல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவானது 2022 ஆம் ஆண்டு முடிவடைகையில் மொத்தமாக 627,536 NVQ சான்றிதழ்களை வழங்கியதுள்ளதுடன் தேசிய தொழிற்திறன் தகுதி வரையுறுவின் தொடக்கத்திலிருந்து நாட்டின் தொழிற்படையை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது.

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2006	259
2007	1629
2008	8915
2009	11249
2010	13256
2011	16572
2012	18111
2013	22855
2014	28546

ஆண்டு	சான்றிதழ்களின் எண்ணிக்கை
2015	44148
2016	47017
2017	65212
2018	61150
2019	78007
2020	47621
2021	45033
2022	117954
மொத்தம்	**627534**

2006 தொடக்கம் 2022 வரை வழங்கப்பட்ட ஏஞ சான்றிதழ்களின் எண்ணிக்கை



தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5/6 இற்கு சமனாக்கம்/ மேப்பிங் செய்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) பல்வேறு தொழிற்கல்வி தகுதிகளை அங்கீகரித்து அந்தந்த பாடநெறிகளுக்குச் சமமான NVQ மட்டங்களை தேவைப்படும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தகுதி வழங்கும் அமைப்புகளின் கோரிக்கைகளுக்கு இணங்க இலங்கையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்கான முறையான நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன்படி, ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 5/2021 (www.tvec.gov.lk) மற்றும் பிற தொடர்புடைய அளவுகோல்கள் என்பவற்றின் பிரகாரம் தொழிற்பயிற்சி நிறுவனமும் பாடநெறியும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

பாடநெறி நடாத்தப்படும் நிறுவனம்	சமன் செய்யப்பட்ட பாடநெறி	சமன்படுத்தப்பட்ட / மேப்பிங் செய்யப்பட்ட NVQ மட்டம்
இலங்கை சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA)	கணக்கியல் மற்றும் வணிக முகாமைத்துவ டிப்ளோமா (DABM)	மட்டம் 06
ரீ லங்கா டெலிகொம் பயிற்சி நிலையம் (SLTC),	பியர்சன் டீவுநுஉள உயர் தேசிய பொறியியல் டிப்ளமோ(எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங்)	மட்டம் 06 (மின்னணு தொழில்நுட்பம்)
இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்	கணக்கியல் மற்றும் வணிக டிப்ளோமா - AAT இறுதி மட்டத்தில் தேர்ச்சி பெற்றவர்கள்	மட்டம் 05

தொழில் முதிர்ச்சி பெற்ற தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்

தொழில்முறை முதிர்ச்சியின் அடிப்படையில், தேசிய தொழிற்திறன் தகுதிகளின் 5 வது மட்டத்துக்குச் சமமான சான்றிதழ்களை வழங்குவதற்கு விண்ணப்பித்த துறைகள் தொடர்பான நேர்முகத் தேர்வு நடத்தி தகுதியான தேர்வுநாடிகளுக்கு 75 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்பார்வை நிலை பணி அனுபவம் உள்ள தேர்வுநாடிகளுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 இற்குச் சமமான சான்றிதழ் வழங்க விண்ணப்பித்த 20 துறைகள் தொடர்பாக நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு 56 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

சாதாரண செயல்முறைக்கு மேலதிகமாக ஒரு மாதத்திற்குள் NVQ மட்டம் 5 சமனான சான்றிதழை வழங்கும் விரைவு செயல்முறையும் (Speedy Process) (NVQ மட்டம் 5 தொடர்பான சில துறைகள் தவிர மற்றைய துறைகளுக்கு) தொடங்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டு முழுவதும் 60 விண்ணப்பங்கள் பெறப்பட்டதுடன் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் மதிப்பீடு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

தேசிய தொழிற்திறன் தகுதிகளை வழங்காத பாடநெறிகளை தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 5 இற்கு சமனாக்கம் செய்தல்

தேசிய தொழிற்திறன் தகுதிக்கான தேர்ச்சித் தரங்கள் தயாரிக்கப்பட்டிருப்பினும் அவற்றின் மூலம் தேசிய தொழிற்திறன் தகுதி பெறாத இனங்காணப்பட்ட துறைகளில் உள்ளவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிக்குச் சமனான தகுதி விருதளிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

தேசிய தொழில்நுட்பச் சான்றிதழைப் (NCT) பெற்றவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதிக்குச் சமனாக்கம் செய்து சான்றிதழ் விருதளிப்பதற்காக செய்தித்தாள் விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. சோதிப்பதற்காக. 2021 மற்றும் 2022 இல் நடத்தப்பட்ட பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற 914 பேரில் 505 பேருக்கு ஆன்லைன் மூலம் தொழில்முறை மீளாய்வுச் (Professional Review) தேர்வுகள் நடத்தப்பட்டன. தொழில்முறை மீளாய்வுத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற 302 பேருக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி தேசிய தொழிற்திறன் தகுதி சமச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், அந்தச் சான்றிதழின் மறுசான்றளிப்புக்காக (சரிபார்ப்பு) பல்வேறு நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட 87 கோரிக்கைகளுக்கான சான்றிதழ் கடிதங்களும் வழங்கப்பட்டன.

பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்திறன் தகுதிக்கு (NVQ) சமனான மட்டம்	வழங்கப்பட்ட சமப்படுத்தல் சான்றிதழ்களின் எண்ணிக்கை
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (குடிசார் பொறியியல்) மற்றும் தேசிய கைத்தொழில் தொழில்நுட்பச் சான்றிதழ் (குடிசார் பொறியியல்)	மட்டம் 05	193
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (கணிய அளவீடு)	மட்டம் 05	14
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (மின் பொறியியல்)	மட்டம் 05	78
தேசிய தொழில்நுட்பச் சான்றிதழ் (எந்திர பொறியியல்)	மட்டம் 05	17

பின்வரும் சான்றிதழ்களுக்கான சான்றிதழ் வைத்திருப்பவர்களின் கோரிக்கைகளின்படி சமமான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டச் சான்றிதழ்களை வழங்குதல்

நிறுவனத்தின் பெயர்	பாடநெறியின் பெயர்	தேசிய தொழிற்திறன் தகுதிக்கு (NVQ) சமனான மட்டம்	வழங்கப்பட்ட சமப்படுத்தல் சான்றிதழ்களின் எண்ணிக்கை
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை/ தேசிய பயிலுநர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா	மட்டம் 05	14
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்	கணிய அளவீட்டில் டிப்ளோமா	மட்டம் 06	08
பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம்	பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	34
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்	முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	95
	தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	16
	மின் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	03
	குடிசார் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	02
	எந்திரப் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா	மட்டம் 06	01

தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) சான்றிதழ் வழங்குதல் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள்

முந்தைய கற்றல் அங்கீகார (RPL) முறையினூடான கணிப்பீட்டின் முன்னேற்றம்

முந்தைய கற்றல் அங்கீகார (RPL) கணிப்பீட்டு முறைகள் குறித்து அவ்வப்போது முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டதுடன் எழும் சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்து தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களோடு செயல்பாட்டுக் குழுக் கூட்டங்கள் மற்றும் பரீட்சைச் சபைக் கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்டது.

தேர்ச்சிசார் கணிப்பீட்டின் மாறாமையை உறுதிப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்துதல்

தேர்ச்சிசார் கணிப்பீட்டின் மாறாத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் கணிப்பீட்டாளர்களின் அறிவை இற்றைப்படுத்தி மேம்படுத்த செயலமர்வுகளை நடாத்துதல்.

மேற்கூறிய நோக்கத்தை அடையும் நோக்கில் 12 செயலமர்வுகள் 2022 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டது, எனினும் கோவிட்-19 தொற்றுநோய் பரவல் காரணமாக அனைத்து கணிப்பட்டாளர்களையும் கூட்டி அழைத்து செயலமர்வுகளை நடாத்த இயலாமை ஏற்பட்டதுடன் அவ்வாண்டி ZOOM தொழில்நுட்பத்தின் மூலம் ஆறு (06) செயலமர்வுகள் நடைபெற்றன.

தகவல் முறைமை

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு கணினி தகவல் முறைமைகளை அபிவிருத்தி செய்து நிர்வகிக்கும் அதே வேளையில், ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் தகவல் முறைமைகளுடன் நேரடித் தொடர்பு கொண்ட தொழில் பயிற்சி நிறுவனங்கள் தங்களின் தொடர்புடைய தரவை இற்றைப்படுத்தக்கூடிய இயலுமையையும் கொண்டுள்ளன. மேலும், தகவல்களை வழங்க பல்வேறு இணையதள பக்கங்கள் பராமரிக்கப்படுகிறது.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய தளத்தை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

ஆணைக்குழுவின் செயல்பாடுகளை மிகவும் துல்லியமாக இற்றைப்படுத்தி வைத்திருத்தல், ஆணைக்குழுவை மென்மேலும் மேம்படுத்துதல் மற்றும் தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் துறையில் புதிய அபிவிருத்திகளை அறிமுகப்படுத்தல்கள் போன்ற விடயங்கள் ஆணைக்குழு இணைய தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ் விடயங்கள் TVET துறையில் ஆர்வமுள்ளவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இணைய தளத்தின் நகல் கீழே தரப்பட்டுள்ளது.



ஆணைக்குழுவின் பிரதான இணையதளம் பின்வரும் இணையதளங்களுக்கான அணுகலை வழங்குகிறது.

- தொழிநுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கை
- தேசிய தொழிற்திறன் தகுதிச் சுற்றறிக்கைகள்
- தொழிலாளர் சந்தை தகவல் (LMI)
- தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ)
- பாடநெறி பதிவு மற்றும் தராதர அங்கீகாரம் (Registration & Accreditation)
- திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி (Planning & Research)
- அக இணையம் (Intranet)
- ஆணைக்குழு ஆராய்ச்சி வட்டம் (Research Cell)
- செய்திகள் மற்றும் நிகழ்வுகள்
- தகவல் முறைமைகள்
- தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சி வழிகாட்டி
- தேசிய தொழில்முறை தகுதியை விருதளிக்கும் முறை
- விண்ணப்பங்கள் மற்றும் தகவல்களைப் பதிவிறக்கம்
- அக இணைய வலையமைப்பு

தொழிற்சந்தை தகவல் முறைமையை அபிவிருத்தி செய்து பராமரித்தல்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு இலங்கையில் தற்போதைய தொழிற்தேவை மற்றும் பிற தொழிற்சந்தை தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தொழிற்சந்தை தகவல் முறைமையை நிறுவியுள்ளது.

கொள்கை வகுப்பாளர்கள், தொழில் வழிகாட்டிகள், வேலைவாய்ப்பு முகவர்கள், பயிற்சியாளர்கள், வேலை வழங்குபவர்கள் மற்றும் தொழிற்சந்தைத் துறையில் வேலை செய்பவர்களின் நலனுக்காக தரவு ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மூலம் பெறப்பட்ட தகவல்கள் வெளியிடப்படுகின்றன.

தொழிற்சந்தை தகவல் இணைய பக்கம்

பிரத்தியேக தொழிலாளர் சந்தை தகவல் இணையப் பக்கம் அதன் பயனர்களுக்கு பயனுறுதியும் வினைத்திறனும் வாய்ந்த தொழிலாளர் சந்தை தகவல் சேவையை வழங்கும் நோக்கத்துடன் 2022 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

- தற்போதைய தொழிற்சந்தை தகவல்களின் பகுப்பாய்வு
- பாடநெறித் தகவல்களை இணையத்தில் (ஆன்லைனில்) பார்க்கும் வசதி
- கடந்தகால தொழிலாளர் சந்தை தகவல் வெளியீடுகள்
- தொழிற்சந்தையின் எண்ணக்கருத்து மற்றும் வரைவிலக்கணம்
- பயனுள்ள இணையதளங்களுக்கான அணுகல்
- சுயவிபரக் கோவையுடன் (பயோடேட்டா) விண்ணப்பங்களைச் செய்வதில் உதவுதல்
- வேலை வாய்ப்புகள் பற்றிய தகவல்களைப் பெற முடிதல்

- தொழிற்துறை மற்றும் தொடர்புடைய தொழிற்துறைகளில் முதல் 10 அதிக கேள்வியுள்ள தொழில்கள் காட்சிப்படுத்தி முக்கியமான தகவல்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தொழிற்சந்தை தகவல்களின் கருத்தியல் விதிமுறைகள் வரையறைகள் மற்றும் சொற்களஞ்சியம், சொற்கள் தொழிற்சந்தை வேலை விளம்பரங்கள், தொழில்தருநர் சமர்ப்பித்த பல்வேறு தகவல்கள் போன்றவை இவ் வலைப்பக்கத்தில் இற்றைப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

பதிவு மற்றும் தராதர அங்கீகார இணைய பக்கம்

இந்த இணையப் பக்கம் நிறுவன பதிவு மற்றும் பாடநெறி அங்கீகாரம் பற்றிய அனைத்து தகவல்களையும் வழங்குகிறது. மேலும், இப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள், பாடநெறி மற்றும் தராதர அங்கீகாரம் பெற்ற பாடநெறிகளின் விபரங்கள், தர முகாமைத்துவ முறைமை நிறுவப்பட்டுள்ள நிறுவனங்கள், நிறுவன பதிவு விண்ணப்பங்கள், நிறுவன பதிவு புதுப்பித்தல் விண்ணப்பங்கள், பாடநெறி தராதர அங்கீகார விண்ணப்பங்கள் போன்றவையும் உள்ளன. மேலும், பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற படிப்புகள் பற்றிய தகவல்களை ஆன்லைனில் (Online) சரிபார்த்துக் கொள்ளலாம். இவ்வசதியினூடாக பயனர்கள் எவரும் பல்வேறு முறைகளின்படி தகவல்களைக் பெற்றுக்கொள்ள முடியும்.

பாடநெறிப் பதிவு, நிறுவனப் பதிவு ஆகியவற்றுக்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்க முடியும் என்பதும், ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனி போர்டல் (Portal) ஒதுக்கப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பம்சமாகும். இவ் வசதி 2022 ஆம் ஆண்டில் மேலும் மேம்படுத்தப்பட்டதுடன் NVQ சான்றிதழ்களை அச்சிடும் முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இது தர முகாமைத்துவத்தின் ஒரு படி முன்னேற்றமாகும்.

புதிய அம்சங்களைச் சேர்ப்பதன் மூலம் (NVQ) தகவல் முறைமை மென்பொருளை மேம்படுத்துதல்

2022 ஆம் ஆண்டில், ஆணைக்குழுவின் முக்கிய கணினி மென்பொருளான NVQ தகவல் முறைமை மென்பொருளில் பின்வரும் புதிய அம்சங்களைச் சேர்த்ததன் மூலம் முறைமை மேலும் மேம்படுத்தப்பட்டது. இந் நடவடிக்கைகளின் மூலம் ஆணைக்குழுவின் அனைத்து பங்குதாரர்களுக்கும் உயர்தர சேவையை வழங்க முடிந்தது.

- கணிப்பீட்டாளர் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கும் போது Online ஊடாக விண்ணப்பிக்கும் முறைமையை மேம்படுத்துதல்
- Online முறையில் சீடு ஊடாக விண்ணப்பிப்பதற்கான முறைமையை மேம்படுத்துதல்
- DTET மற்றும் VTA நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திலிருந்து அந்த நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து பயிற்சி நிறுவனங்களின் சுருக்கத் தகவலைப் பார்க்கும் வகையில் அமைப்பை மேம்படுத்துதல்.
- பாடவிதானத்தின் (Curriculum) செல்லுபடித்தன்மையை உறுதிப்படுத்துவது பற்றிய NAITA வின் முன்னேற்றம் (Progress) தொடர்பான தகவல் முறைமையை விருத்திசெய்து புதுப்பித்தல்
- அறிவுசார் கணிப்பீடு தொடர்பான தனிப்பட்ட விண்ணப்பதாரர்களின் முடிவுகளை முடிந்தவரை தகவல் முறைமையில் சேர்க்க நடவடிக்கை எடுத்தல்

இணையம், மின்னஞ்சல் மற்றும் இதர வசதிகள்

- மின்னஞ்சலைப் பயன்படுத்துவது தொடர்பான அரசாங்கச் சுற்றறிக்கையின்படி, ஒவ்வொரு ஊழியரினதும் செயல்திறனை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும், அலுவலக தகவல்களைப் பரிமாறிக் கொள்வதில் நேரத்தை மிச்சப்படுத்தவும் புதுமையுடன் இணையம் மற்றும் மின்னஞ்சல் வசதிகளைப் பயன்படுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. இவ் ஏற்பாடு ஆணைக்குழுவின் ஊழியர்களின் தகவல் தொடர்புத் திறனை மேம்படுத்துவதோடு இணையம் மூலம் புதிய அறிவைப் பெறுவதற்கும் உதவியுள்ளது. ஊழியர்களுக்கு தகவல்களை வழங்க ஓர் அக இணையமும் (Intranet) பராமரிக்கப்படுகிறது.
- இப் புதிய தகவல் தொடர்பாடல் முறையின் நெகிழ்வுத்தன்மை மற்றும் தகவல்களைப் பெறுவதற்கான எளிமை காரணமாக பயனர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.
- மின்னஞ்சல் பயன்பாடுகள் மற்றும் இணைய வசதிகள் 2022 ஆம் ஆண்டிலும் விரிவுபடுத்தப்பட்டதுடன் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு தொடர்பாடலை திறம்பட மேற்கொள்வதற்கு அதிக வாய்ப்புகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டது.
- தகவல் முறைமைகள் பிரிவானது 2022 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக உள்ளக கணினி வலையமைப்புகள்/ நெட்வொர்க்குகள், இணையம் மற்றும் மின்னஞ்சல் அமைப்புகளின் கணினி நெட்வொர்க் அணுகல் தடைகளை (நெட்வொர்க் /பயர்வால்) பராமரித்தது.

ஆணைக்குழுவின் நூலகம்

ஆணைக்குழுவின் நூலகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வியின் பல்வேறு துறைகளில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழிற்பயிற்சித் துறையில் உள்ள பல்வேறு நபர்களுக்கு நூலக வசதிகளை வழங்கியுள்ளது. அதன்படி, பின்வரும் சேவைகள் நூலகத்தால் வழங்கப்படுகின்றன.

- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறை தொடர்பான புத்தகங்கள், ஆராய்ச்சி அறிக்கைகளை வழங்குதல்
- ஆணைக்குழுவின் வெளியீடுகளை விநியோகித்து நிர்வகித்தல்
- பருவ இதழ்கள் பயன்படுத்துவதை எளிதாக்குதல்
- தினசரி செய்தித்தாள்கள் மற்றும் பிற ஆவணங்கள் பயன்படுத்துவதை எளிதாக்குதல்
- பல்வேறு பிற தகவல் குறிப்பு ஆவணங்கள் சேவைகள் மற்றும் தகவல் சேவை வழங்கல் வசதிகள்

இதற்கு மேலதிகமாக, ஆணைக்குழுவின் நூலகத்தில் இல்லாத ஆனால் தேவையான நூலகத் தகவல் சேவையில் ஆர்வமுள்ள வாசகர்களுக்கு நூலகங்களுக்கிடையேயான சேவைகள் வழங்கப்படுகிறது. ஆணைக்குழு ஊழியர்களின் தகவல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கடந்த ஆண்டில் மற்றைய நூலகங்களிலிருந்து தகவல் வளங்கள் பகிரப்பட்டன.

மேலும், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தின் நிறுவன அங்கத்துவத்தையும் பெற்றுள்ளது. இதன் கூடுதல் வாசிப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது 2022 ஆம் ஆண்டில் வாசகர்களுக்கு சர்வதேச அறிவையும் பெற்றுக்கொடுக்க நூலகம் பணியாற்றியது.

பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்

ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் புதிதாக பதிவுசெய்துகொள்ள எத்தனிக்கும் நிறுவனங்களுக்கு வசதிகளை செய்துகொடுப்பதற்கான மென்பொருள் முறைமை பராமரித்தல் மற்றும் அம்முறைமை வெற்றிகரமாக செயற்படுத்துதற்கான பயற்சி அமர்வுகள் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

கைத்தொழிற்துறை உறவுகள்

அறிமுகம்

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் தேவைகளுக்கு ஏற்றவாறு எதிர்கால தொழில் வாய்ப்புகளுக்காக ஒரு தேர்ச்சியுடைய தொழிற்படையை உருவாக்க, தொழில்துறையுடன் நல்லுறவை ஏற்படுத்துவதன் மூலம் பிராந்திய தொழில்துறையினருடன் உறவுகளைப் பேணுவதற்கான துறைசார் திறன் சபைகளின் தேவைப்பாட்டை இனங் கண்டுள்ளது. மேலும், இளைஞர்களுக்கு சரியான தொழில் வழிகாட்டுதலை வழங்குவதற்கும், தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறையின் வளர்ச்சிக்காக சர்வதேச நிறுவனங்களின் உறவுகளை வலுப்படுத்துவதற்கும், இது குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கும் உயர்தர தொழில் வழிகாட்டல் சேவைகளை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகள் இவ்வாணைக்குழுவால் எடுக்கப்பட்டுள்ளது.

துறைசார் திறன்கள் சபைகளை நடாத்திச் செல்லல்

ஆறு (06) துறைசார் திறன் சபைகளை கொண்டு நடாத்திச் செல்வதற்காக துறைசார் திறன்கள் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் மூலம் துறைசார் திறன் சபைகளுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளை திருப்பிச் செலுத்துதல் மற்றும் அவற்றை மிகவும் திறம்பட செயல்படுத்த தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் போன்ற அலுவல்களை இப் பிரிவு மேற்கொள்கிறது.

- கட்டுமான துறைசார் திறன்கள் சபை
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை
- உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை
- சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை
- சுகாதாரம் மற்றும் கவனிப்பு துறைசார் திறன்கள் சபை
- விவசாயத் துறைசார் திறன்கள் சபை

கட்டுமான துறைசார் திறன்கள் சபை

கட்டுமானத் துறையில் உள்ள தொழிலதிபர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்துடன் உருவாக்கப்பட்டுள்ள இச்சபையானது கட்டுமானத் துறையின் திறன் தொழிலாளர் தேவைகளை எதிர்வுகூறுவதன் மூலம் தேசிய தேர்ச்சித் தரங்களை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மேலும் இச்சபையினூடாக பிளம்பிங் மற்றும் மின்சாரத் தொழில்களில் வர்த்தகக் கழகங்களும் (Trade Guilds) செயல்படுத்தப்பட்டுள்ளன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப துறைசார் திறன்கள் சபை

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் தொழில்துறையின் தேவைகளைக் கண்டறிய சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இத் திறன் சபை தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப பல்வேறு தருணங்களில் தேவையான பரிந்துரைகளையும் வழங்கியுள்ளது.

2022

- தொழிற்கல்வித் துறையில் பயிற்சி முடித்த மாணவர்களைப் பதிவு செய்யவும், தொழில்தருநர்களைப் பதிவு செய்து சேவையைப் பெறவும் மொபைல் ஆப் உருவாக்கலும் இவ்வாண்டில் இடம்பெற்றது.
- தகவல் மற்றும் தொடர்பாடல் துறையில் பிரவேச எத்தனிக்கும் மாணவர்களைப் பதிவு செய்து அந்த மாணவர்களுக்கு தகவல் மற்றும் தொடர்பாடல் பாடநெறிகளைப் படிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கும் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

உற்பத்தி மற்றும் பொறியியல் சேவை துறைசார் திறன்கள் சபை

இச்சபை முக்கிய தொழில்களை உள்ளடக்கியதாக செயல்படும் அதே வேளையில், தொழில்துறையின் தேவைக்கேற்ப உற்பத்தி தொழில்நுட்ப துறை தொடர்பான தேசிய தேர்ச்சித் தரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை

சுற்றுலாத் துறையின் பிரதிநிதித்துவத்துடன் இச்சபை நிறுவப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளை, தொழில்துறையின் முக்கிய தொழிற் தேவைகளை மேம்படுத்தும் நோக்கத்தை எய்தும் வகையில் தொழிற்படுகிறது.

2022

- மார்ச் 8, 2022 அன்று சிகிரியாவிலுள்ள காஸ்ஸப்பா லயன் ராக் ஹோட்டலில் உலக மகளிர் தின இணை நிகழ்வாக ஹோம்ஸ்டே தொழில்முனைவோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை சுற்றுலாத் துறைசார் திறன்கள் சபை ஏற்பாடு செய்தது.
- உலக இளையோர் திறன்கள் தின இணை நிகழ்வாக இரண்டு (02) விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் பாடநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு தொழில்முனைவோரின் எதிர்பார்ப்புகள் மற்றும் தொழில்வாண்மையாளர் ஆவதற்குத் தேவையான திறன்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று அஹுங்கம தொழிற்பயிற்சி அதிகாரசபையின் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.
- ஹோட்டல் மற்றும் சுற்றுலாத் துறையில் பாடநெறிகளை நடாத்தும் பயிற்சி நிறுவனங்களுக்கு தொழில்துறையின் வாய்ப்புகள் மற்றும் மாணவர்களின் எதிர்கால பாதை குறித்தும் தெரிவிக்கப்பட்டது.
- F & B and Cookery, Housekeeping & front office, Social Media & Marketing பற்றி சிகிரியா, தம்புள்ளை மற்றும் ஹபரன பிரதேசங்களிலுள்ள ஹோம்ஸ்டே தொழில்முனைவோருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- சுற்றுலாத் துறையில் புதிய வாய்ப்புகளை கண்டறிதல் மற்றும் தேசிய தேர்ச்சித் தரங்களை அபிவிருத்தி செய்யத் தேவையான வழிகாட்டுதலும் வழங்கப்பட்டது.

விவசாயத் துறைசார் திறன்கள் சபை

2022 ஆம் ஆண்டு விவசாயத் துறையிலுள்ள தொழில்துறையினரின் பங்கேற்புடன் இத் திறன்கள் சபை நிறுவப்பட்டு தற்போது தொழிற்பாட்டு நிலையில் உள்ளதுடன் மீளாய்வாண்டில் ஆறு (06) கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

சுகாதாரம் மற்றும் கவனிப்பு துறைசார் திறன்கள் சபை

சுகாதாரம் மற்றும் கவனிப்பு துறையின் பிரதிநிதித்துவத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்தக் குழு தொழிற்படுகிறது

2022 ஆம் ஆண்டில், பின்வரும் தேசிய தேர்ச்சித் தரங்கள் மற்றும் பாடவிதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

- Phlebotomist (மருத்துவமுறைக் குருதிவடிப்பு வினைஞர்)
- Cardiac care Technician (இருதய பராமரிப்பு தொழில்நுட்ப வினைஞர்)
- Nursing Educator (தாதி கல்வியாளர்)
- Nursing level 6 (தாதி மட்டம் 06)
- Medical Laboratory Technician (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வினைஞர்)
- Dialysis Technician (ஊடிழிசல் தொழில்நுட்ப வினைஞர்)
- Health Promotion (சுகாதார மேம்பாடு).

மீளாய்வாண்டில் 12 குழுக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன.

துறைசார் திறன்கள் சபைகளின் முன்னேற்ற மீளாய்வு

2022

- துறைசார் திறன் சபைகளை முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கும் எதிர்கால வேலைகளை தெளிவுபடுத்துவதற்கும் சபைத் தலைவர்களுடன் கூட்டங்கள் நடைபெற்றன.
- துறைசார் திறன்களின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும், எதிர்கால திட்டங்களை செயல்படுத்தவும், திட்டங்களை செயல்படுத்துவதில் எழும் சிக்கல்களைத் தீர்க்கவும், வருடத்தில் மூன்று (03) கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டன. மின்னஞ்சல் மூலம் தேவையான தொடர்பாடலும் மேற்கொள்ளப்பட்டது.

தொழில் வழிகாட்டுதல் சேவையின் தரநிலைப்படுத்தல்

தொழில் வழிகாட்டுதல் தொடர்பான **NVQ** மட்டம் 4 மற்றும் 5 - தேசிய தேர்ச்சித் அறிமுகப்படுத்துதல்

தொழில் வழிகாட்டல் நிலையங்களின் பதிவு அறிமுகம்

தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கான அடையாள அட்டை அறிமுகம்

தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டங்களை நடாத்துதல்

தகுதியான தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களின் விபரங்களை வெளியீடு செய்தல்

- தொழில் வழிகாட்டல் வழிநடத்தல் குழுவின் முன்மொழிவின்படி, நாடளாவிய ரீதியில் தொழில் வழிகாட்டல் நிலையங்களின் கண்காணிப்பு வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு 41 நிலையங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
    - தொழில் வழிகாட்டல் தொடர்பான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 05 தேசிய தேர்ச்சித் தரம் மற்றும் பாடவிதானம் தயாரிக்கப்பட்டன.
    - மீளாய்வாண்டில் ஐந்து (05) தொழில் வழிகாட்டல் வழிநடத்தல் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டன.
    - தொழில் வழிகாட்டல் அலுவலர்களைப் பதிவுசெய்வதற்காக 20 நேர்முகத் தேர்வுகள் நடாத்தப்பட்டன.
    - தகுதிவாய்ந்த தொழில் வழிகாட்டல் அலுவர்கள் 67 பேர் தரவுத்தளத்தில் சேர்க்கப்பட்டனர்.
    - தொழில் வழிகாட்டல் தொடர்பான தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 இற்கான கணிப்பீட்டாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.
    - தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கான ஒழுக்கக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டது.
    - தொழில் வழிகாட்டல் நிலையங்களை பதிவு செய்யும் முறை மற்றும் தொழில் வழிகாட்டல் அலுவலர்களுக்கு அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்பட்டன.
- பொது தொழில் வழிகாட்டல் நிலையங்களை அபிவிருத்தி செய்து மேம்படுத்தவும் மாவட்ட தொழில் வழிகாட்டல் மையங்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தல்.
    - மீளாய்வாண்டில் குருநாகல், மாத்தளை, வரக்காபொல, இரத்தினபுரி, கொழும்பு, வாரியபொல, கம்பஹா, தம்புள்ளை, நுவரெலியா, கெலியஅத்த, வீரவில, பண்டாரவளை, கண்டி, பாததும்பர மற்றும் எம்பிலிப்பிட்டிய ஆகிய இடங்களிலுள்ள தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் தொழில் வழிகாட்டல் நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- RPL முறை தொடர்பான விழிப்புணர்வு செயலர்வுகளை நடாத்துதல்.
- தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு முந்தைய கற்றல் அங்கீகார முறையினூடாக கணிப்பீட்டுச் செயல்பாட்டை (**RPL**) e-RPL முறையாக செயல்படுத்துவது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் வளர்ச்சிக்கான ஆதரவை வழங்கும் செயற்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்களுடன் அலுவல்கள் மேற்கொள்ளல்.
    - திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், தொழில் வழிகாட்டல் விருத்தி தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல்
    - தொழில் வழிகாட்டல் பணிகளில் ஈடுபட்டுள்ள அனைத்து அதிகாரிகளுக்கும் 25 திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் உட்பட 29 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய தேசிய இளைஞர் படை உத்திகத்தோர்களுக்கான நான்கு (04) நிகழ்ச்சிகள் சர்வதேச தொழிலாளர் தாபனத்துடன் இணைந்து நடாத்தப்பட்டன.
- சர்வதேச தொழிலாளர் தாபனத்தின் ஏற்பாடுகளுடன் தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்களுக்கான ஆன்லைன் முறையை தொடங்குதல்
- தேசிய தொழிற்திறன் தகுதிகளுக்கான சர்வதேச அங்கீகாரத்திற்காக சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்புறுதல்

- சவூதி அரேபியா மற்றும் பிற நாடுகளில் தேசிய தொழிற்திறன் தகுதியை அங்கீகரிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து தேவையான சட்ட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டதுடன் கட்டுமானத் துறைக்கான ஜெர்மன் செயற்திட்டத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான அலுவல்களும் தொடங்கப்பட்டன.

தொழில்நுட்ப, தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறை பற்றிய விழிப்புணர்வு (ஊடக ஆன்லைன் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்)

- வெகுஜன ஊடகங்களுடன் தொடர்புடைய தொழிற்பயிற்சி துறை பற்றிய தகவல்களை விளம்பரப்படுத்துதல் மற்றும் பிரச்சாரம் செய்தல்
- தொழிற்கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஊடகத்துறை அமைச்சுடன் இணைந்து இரண்டு (02) செய்தியாளர் சந்திப்புகள் நடத்தப்பட்டதுடன் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்த வானொலிச் செய்திகள் ஒரு மாதமாக பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேலும், "தொரமடலாவா" இல் இரண்டு (02 (02) நிகழ்ச்சிகளும், எட்டு (08) தொலைக்காட்சி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மற்றும் ஐந்து (05) வானொலி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.
- உலக இளையோர் திறன்கள் தின இணை நிகழ்வாக பல்வேறு தொழில்முறை துறைகளில் ஆன்லைன் வெபினார் தொடர்களை (online webinar series) நடாத்துதல்
- கொள்கை அபிவிருத்திக்கான தேசிய தொழில் வழிகாட்டல் வழிநடத்தல் குழுவை செயல்படுத்துதல். இதனூடாக பின்வரும் நோக்கங்களும் செயற்படுத்தப்பட்டன.
- தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வித் துறையில் புதிய வளர்ச்சிப் பரிமாணங்களைப் பற்றி மாவட்ட அளவில் நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் தற்போதுள்ள வேலை வாய்ப்புகள் குறித்து பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டுச் செல்பவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.
    - தொம்பே கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி
    - டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலயத்தின் தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி
    - தொம்பே கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்துதல்
    - அழகு துறையில் பணிபுரிபவர்களுக்கு தேசிய தொழிற்திறன் தகுதி பெறுவது பற்றிய விழிப்புணர்வு
    - அரச உத்தியோகத்தர்களுக்கு தொழிற் பயிற்சி முறைமை பற்றி அறிவூட்டுவதற்கு கண்டியில் இரண்டு நிகழ்ச்சிகளை நடாத்துதல்
    - பயிலுநர் பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்துதல்
    - நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
    - புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆன்லைன் முறையில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்துதல்
    - ஹாபிட்டிகம ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்துதல்
    - சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு முந்தைய கற்றல் அங்கீகார முறையினூடான கணிப்பீடு செயற்பாடுகள் பற்றி விழிப்புணர்வு

- பேராதனைப் பல்கலைக்கழக மாணவர் கழகத்தினூடாக இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து அதற்கான ஆன்லைன் ஆதாரங்களை வழங்குதல்
